பக்கங்கள்: 16 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 04 ஞாயிற்றுக்கிழமை 17.01.2021 கதிர் 73


இனி அது ரகசியம் அல்ல!

'எப்பவோ முடிந்த காரியம்' – இது யாழ்ப்பாணத்து யோகர் சுவாமியின் மகா வாக்கியம்.

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஜெனிவாக் கூட்டத் தொடரை ஒட்டிய விவகாரத்தில் தமிழ்த்தேசியக்கட்சிகள், அமைப்புகள் எல்லாம்

பக்கம் 02 »

## புலிகள் மீதான தடை; நீடித்தது அமெரிக்கா!

### இலங்கை அரசு வரவேற்பு

தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவேந்தும் நிகழ்வுகள் அமெரிக்காவில் பகிரங்கமாக இடம்பெற்று வருகின்ற போதிலும் அந்த அமைப்பு மீதான தடையை அமெரிக்கா தொடர்ந்து நீடித்துள்ளது.

அமெரிக்காவின் வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகள் மீதான தடைப்பட்டியலில் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது என அந்நாட்டு வெளியுறவுத்துறை அறிவித்துள்ளது.

பக்கம் 02 »

## தனியார் பஸ் உரிமையாளர்கள் நாளை முதல் வேலைநிறுத்தம்!

நாளை திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்த தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் முடிவு செய்துள்ளது.

தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவரான கெமுனு விஜேரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

பக்கம் 02 »

## மட்டக்களப்பில் 10 பொலிஸார் உட்பட 15 பேருக்கு கொரோனா

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று மாலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலத்தில் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 10 பொலிஸார் உட்பட 15 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன்

பக்கம் 02 »

## மக்களுக்கு முன் ராஜபக்ஷ அரசை தோற்கடித்துவிட்டது கொரோனா!

### ஐ.தே.க. ரணில் விளாசல்

ராஜபக்ஷ அரசை நாட்டு மக்களுக்கு முன் கொரோனாவே தோற்கடித்துவிட்டது என முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொரோனாத்தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கான எந்தவொரு திட்டமும் இந்த அரசிடம் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நுகேகொடை பகுதியில் இளைஞர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையர்கள் அனைவருக்கும் மார்ச்

பக்கம் 15 »

## சிறைச்சாலை அத்தியட்சரின் உறுதிமொழியை அடுத்து போராட்டத்தைக் கைவிட்டார் அரசியல் கைதி தேவதாசன்

உண்ணாவிரதப் போராட்டத்தில் கடந்த 10 நாள்களாக ஈடுபட்டிருந்த அரசியல் கைதியான தேவதாசன் சிறைச்சாலை அத்தியட்சரின் உறுதிமொழியை அடுத்து நேற்று தொடக்கம் மூன்று வாரங்களுக்குத் தனது போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளார்.

மேன்முறையீட்டு வழக்குகள் இரண்டும் துரித விசாரணைக்கு உட்படுத்தப்படாது விடின் பிணை அனுமதி வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்துள்ளார்.

மேன்முறையீட்டு வழக்குகளில் துரித விசாரணை சாத்தியமில்லையாயின், பிணை அனுமதி பெற ஆவண செய்து தருமாறு கோரி புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதியான

பக்கம் 15 »

## ஜி.சீ.ஈ. சாதாரண, உயர்தரத்துக்கு தனியார் வகுப்புகள் ஜன.25 முதல்

கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக இடைநிறுத்தப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களை வரும் 25ஆம் திகதி தொடக்கம் மீள ஆரம்பித்து நடத்துவது தொடர்பான சுற்றறிக்கை 15ஆம் திகதி வெளியிடப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், சிறப்பு மருத்துவர் அசேல குணவர்தன அறிவித்தார்.

சுகாதார

பக்கம் 02 »

## பொறுப்புக்கூறலை ஐ.நா. சபையிடம் பாரப்படுத்துங்கள்!

### மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஜெனிவா அமர்வுக்கு தமிழ்த் தேசியத் தரப்புகளின் ஐக்கியப்பட்ட தீர்மானம்

கொழும்பு,ஜனவரி 17

இனப்படுகொலை, மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களை விசாரிப்பதற்காக – பொறுப் புக்கூறல் சம்பந்தமாக பலமான நடவடிக்கை எடுப்பதற்காக உயரிய – தளங்களுக்கு இலங்கையைக் கொண்டு செல்ல வேண்டும்.

– இவ்வாறு கோரி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 47 உறுப்பு நாடுகளின் தூதரகங்களுக்கும் இலங்கை

பக்கம் 02 »



## வடக்கில் மேலும் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் மேலும் 10 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது என யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர்

பக்கம் 02 »




## 256 ஆக அதிகரித்தது கொரோனா மரணம்!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துல்கோட்டை பகுதியைச் சேர்ந்த 82

பக்கம் 02 »

## 52 ஆயிரத்தைத் தாண்டியது தொற்றாளர் எண்ணிக்கை!

### நேற்று மட்டும் 715 பேருக்கு வைரஸ் உறுதி

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 52 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

நேற்று மட்டும் 715 பேருக்குக்

பக்கம் 02 »

## அம்பாறையில் கருணா அணியினர் அராஜகம் பொத்துவில் பிரதி தவிசாளர் மீது வாள்வெட்டு

அம்பாறை மாவட்டம், பொத்துவில் பிரதேச சபையின் பிரதி தவிசாளர் பெருமாள் பார்த்தீபன் நேற்று முன்தினம் இரவு வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கருணாவுக்கு ஆதரவாகப் பொத்துவில் பிரதேசத்தில் செயற்பட்டசுரேஷ்குமார், பொலிஸ் உத்தியோகத்தரான ருக்சன் மற்றும் ராஜேந்திரன் என்பவர்களே தன் மீது காட்டுமிராண்டித்தனமாக வாள்வெட்டுத் தாக்குதலை

பக்கம் 15 »



## செல்வம் மறுப்பு

'தனித்துச் செயற்படத் தயாராகின்றது ரெலோ; சம்பந்தனுக்குச் செல்வம் எழுத்தில் தகவல்' – என்று நேற்று 'காலைக்கதிர்' நாளிதழின் முன்பக்கத்தில் வெளியான செய்தியை ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்

பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சேர்ந்து ஒற்றை நிலைப்பாடுக்கு வந்திருக்கின்றன. நல்ல விடயம். சந்தோஷம்.

அதைத்தான் 'எப்போதோ முடிந்த காரியம்' என்றேன்.

என் கருத்தை உறுதிப்படுத்துமாற்போல வெளிநாட்டு நண்பர் ஒருவருடன் – நேற்றிரவு நான் நடத்திய – உரையாடல் அமைந்தது. புலம் பெயர் தேசத்தில் மனித உரிமை விவகாரங்களுடன் சற்றுச் சம்பந்தப்பட்டவர் அவர்.

சுமந்திரன் எம்.பி. மீது தீராத சீற்றம் கொண்ட பிரகிருதி. ஏதோ சுமந்திரனுக்கு எமது பத்திரிகை வக்காலத்து வாங்கிச் செயற்படுவதாக அடிக்கடி தொலைபேசி மூலம் சத்தம் போடுவார். நீண்ட கால நண்பர் என்பதால் அவரின் கோபாவேச சத்தங்களை நான் பொருட்படுத்துவதில்லை. நேற்றிரவு தொலைபேசி அழைப்பு எடுத்ததும் தமது சுமந்திரன் விரோதத்தைக் காட்டத் தொடங்கினார்.

*"பார்த்தீரா... சுமந்திரன் விரித்த வலையில் கஜன், விக்கியர் எல்லாம் விழுந்து விட்டினம்..!"* – என்று தொடங்கினார்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் சேர்ந்து ஜெனிவா அமர்வை ஒட்டித் தயாரித்த கூட்டறிக்கை (அல்லது தூதரகங்களுக்கான கடிதம்) எமக்கு முன்பே – நேற்று முன்தினம் இரவே – அவர் பார்வைக்குக்கிடைத்துவிட்டதானதகவலுடன் 'சுமந்திரன் திட்டல் புராணத்தை' அவர் ஆரம்பித்தார்.

நான் அவரை வழிமறித்தேன்.

*"கஜன் விரித்த வலையில் சுமந்திரன் விழுந்தாரா? அல்லது சுமந்திரனின் வலையில் கஜனும், விக்னேஸ்வரனும் விழுந்தார்களா?"* – என்று கேட்ட நான் தொடர்ந்தேன்.

*"தமிழர் விவகாரத்தை ஐ.நா.மனித உரிமைகள் சபையில கையாளுவதைத் தான் சுமந்திரன் இது வரை வலியுறுத்தி வந்தார். ஆனால் ஐ.நா. பொதுச் சபைக்கோ, பாதுகாப்புச் சபைக்கோ, சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கோதான் இதனைக் கொண்டு போக வேண்டுமே தவிர, ஜெனிவா கவுன்ஸிலில் அல்ல என்று ஒற்றைக் காலில் நின்றவர் கஜன் தானே. அவரின்ரை முடிவுதானே இப்ப தீர்மானமாக வந்திருக்கின்றது."* – என்றேன் நான்.

*"அவ்வளவுதான் உமது அறிவு..."* – என்று என்னை வசைபாடியபடி அவர் விளக்கினார்.

*"ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலை இப்ப புதிதாக பல நாடுகள் இந்த ஜனவரி முதல் இடம் பெறுகின்றன. அதனால் கவுன்ஸிலின் 47 உறுப்பினர்களில் இலங்கைக்கான தனித்துவ ஆதரவு இப்போது பெருகியுள்ளது. இந்தச் சமயத்தில் மிகக் காட்டமான பிரேரணை ஒன்றைக் கொண்டு சென்றால் முகக் குப்புற விழ வேண்டியதுதான் என்று இலங்கை விடயத்தில் பிரேரணைகளை முன்வைக்கும் பிரிட்டன், கனடா, மொன்டிநிக்கிரோ உள்ளிட்ட நாடுகள் கருதுகின்றன. ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலிடமிருந்து இலங்கை விடயத்தில் பொறுப்புக் கூறல் கடப்பாட்டை நீக்கும் பிரேரணை வாசகம் ஒன்றை முன்வைத்தால் அத்தகைய பிரேரணைக்கு பெரும்பான்மை நாடுகளின் ஆதரவைப் பெற முடியும் என்று இலங்கை விடயத்தை ஒட்டிய பிரேரணையைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நாடுகள் கருதுகின்றன. அந்த நாடுகளின் எதிர்பார்ப்பு, தேவையை நிறைவேற்றும் முடிவு ஒன்றையே தமிழர் தரப்பின் பரிந்துரையாக முன் வைக்கும் வேலையை சுமந்திரன் தமது நரித்தந்திர மூளைமூலம் கனகச்சிதமாகக் கையாண்டு செய்திருக்கின்றார். பொறுப்புக் கூறல் கடப்பாட்டை இலங்கை மீது சுமத்தும் வாசகத்தை தமிழர் தரப்பின் கோரிக்கையை ஏற்று விலக்கி விட்டதாக இனிப் பிரேரணைக்கு அனுசரனைப் பணி வகிக்கும் நாடுகள் கூறி, விழுந்தும் தமது மீசையில் மண் ஒட்டவில்லை என்று – அவை காட்டிக் கொள்ளும். தமிழர் தரப்பின் கோரிக்கைப்படி ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் இலங்கை தொடர்பான தீர்மானத்தில் இவ்விடயத்தை ஐ.நா.பொதுச்சபைக்கோ அல்லது பாதுகாப்புச் சபைக்கோ எடுத்துச் செல்ல வேண்டும் என்ற வாசகம் இருந்தாலும் கூட அதனால் இலங்கைக்கு பங்கம் ஏதும் வரப்போவதில்லை. கவுன்ஸில் அப்படித் தீர்மானம் நிறைவேற்றியமைக்காக மட்டும் இந்த விடயத்தை பாதுகாப்புச் சபையோ பொதுச்சபையோ தமது பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு விடப்போவதில்லை."* – என்று ஒரே மூச்சில் லெக்ஸர் வைத்தார் அவர்.

*"இலங்கையைப் பொறுப்புக் கூறலில் மாட்டும் வாசகம் இந்த முறையும் பிரேரணையில் இருக்குமானால் தற்போதைய 47 அங்கத்துவ நாடுகளில் பல அதனை ஆதரிக்கா. ஏனெனில் புதிதாக இம்முறை அங்கத்துவம் பெற்ற நாடுகள் உட்பட பல நாடுகளுக்கு பொறுப்புக் கூறல் என்றாலே 'அலர்ஜி'. ஏனெனில இலங்கை போல அவையவையும் தத்தமது நாட்டில் இத்தகைய சிக்கல்களை எதிர்கொள்பவைதான். ஆகவே பொறுப்புக் கூறல் விடயத்தை வலியுறுத்தாத பிரேரணை வாசகத்தை முன் வைப்பதே அந்தப் பிரேரணை தீர்மானமாக அங்கீகரிக்கப்படவும், தமது இராஜதந்திரம் ஜெனிவாவில் தோற்றுப் போகாமல் இருக்கவும் உசிதமான வழி என்று அவை நினைக்கின்றன. அவற்றின் எதிர்பார்ப்பை சுமந்திரன் கனகச்சிதமாக நிறைவு செய்திருக்கின்றார். தங்களை அறியாமலேயே கஜனும் விக்கியும் அந்த வலையில் விழுந்து விட்டனர்."* – என்று ஒரேயடியாக முழங்கித் தள்ளினார் அவர்.

அவரின் வாதத்தை 'கவுண்டர்' பண்ணுவதற்கு என்னிடம் 'பொயிண்ட்ஸ்' இருக்கவில்லை.

*"நீர் சொன்னால் சரியாகத் தான் இருக்கும்"* – என்று கூறி தொலைபேசி இணைப்பைக் 'கட்' செய்தேன்.

அவர் சொன்னது சரியாக இருக்குமா? ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் பொறுப்புக் கூறல் விடயத்தில் இருந்து இலங்கை நழுவுவதற்கு இடமளித்தல் என்ற டீலுக்கும் அவர் போயிருப்பாரா?

பாவம் சுமந்திரன். என்ன செய்தாலும் வாங்கிக் கட்டுகிறார். அவர் இப்படிச் செய்தாலும் பிழை என்கின்றார்கள். அப்படிச் செய்தாலும் பிழை என்கின்றார்கள். பரிதாபத்துக்குரிய பிறவி அவர்..!

★ ★ ★

யாழ்பல்கலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தூபி உடைக்கப்பட்டதும் ஏற்பட்ட பதற்றத்தை அடுத்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே அவசரமாக விரைந்து சென்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அவரின் விஜேராம இல்லத்தில் சந்தித்தார். நிலைமை மோசமானால் பல சிக்கல்கள் ஏற்படும் என்று அவர் பிரதமர் ராஜபக்ஷவை எச்சரித்தார். அதனை அடுத்தே பதற்றத்தைத் தணிக்கும் நடவடிக்கை எடுக்கும் தீர்மானம் எட்டப்பட்டது என்று புதிய தகவல் ஒன்றை கொழும்பு விமர்சகர் ஒருவர் அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

அது பற்றிய புதிய தகவல்கள் தற்போது 'லீக்' ஆகத் தொடங்கியிருக்கின்றன. அவை பற்றிய விவரங்களை ஒட்டி கொழும்புச் செய்தியாளர்களுக்கு மட்டும் தகவல் வெளியிட்டிருக்கின்றனர் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிறி சற்குணராஜா.

– மின்னல் –

## புலிகள் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அமெரிக்க வெளியுறவுத்துறை தனது வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகள் குறித்த பட்டியலின் புதுப்பித்த அறிக்கையை நேற்று வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் பெயர் தொடர்ந்தும் உள்ளடக்கபட்டுள்ளது.

அத்துடன் அமெரிக்காவின் குடிவரவு மற்றும் பிரஜா உரிமை சட்டத்தின் 219 ஆவது சரத்துக்கு அமைவாக எல்.ஜே. மற் றும் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆகிய அமைப்புகள் சர்வதேச பயங்கரவாத அமைப்புகளாகவும் பெயரிடப்பட்டுள்ளன.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீடித்துள்ளமைக்கு இலங்கை அமைச்சர்கள் சிலர் தமது சமூக ஊடகங்களில் வரவேற்பைத் தெரிவித்துள்ளனர்.

## தனியார் பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அரச தரப்பினருக்காக உழைத்துவரும் சிலருக்கு பஸ் போக்குவரத்து அனுமதிச் சீட்டு வழங்குதல் மற்றும் கொரோனா கால நிவாரணங்கள் வந்துகிடைக்காமை போன்ற விடயங்களை முன்வைத்தே வேலைநிறுத்தம் நடத்தத் தீர்மானித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொறுப்புக் கூறலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கூட்டாக ஒப்பமிட்டுக் கடிதம் அனுப்பிவைத்துள்ளனர்

இலங்கையில் யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், இனப்படுகொலை போன்ற விடயங்களில் பொறுப்புக் கூறும் நடவடிக்கையை நிறைவேற்றுவதற்கு ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஊடாகக் கடந்த பத்து வருடங்களாக எடுத்த முயற்சிகள் பலனளிக்காத பின்புலத்திலேயே இந்தக் கோரிக்கை தமிழர் தரப்பினால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

அந்தக் கடிதத்தில் –

1) இலங்கையை இனப்படுகொலை, மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களை விசாரிப்பதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கும் வேறு பொருத்தமானதும் செயற்படுத்தக்கூடியதுமான சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைகளுக்கும் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐ. நா. பொதுச்சபை, ஐ. நா. பாதுகாப்புச் சபை போன்றவை எடுக்க வேண்டும் என்று இந்தப் புதிய தீர்மானத்தில் உறுப்பு நாடுகள் வலியுறுத்த வேண்டும்.

2) ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தலைவர் இவ்விடயத்தை மேல் கூறப்பட்டபடி நடவடிக்கைக்காக மீளவும் செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

3) ஐ. நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகரின் அலுவலகம் இலங்கையில் தொடர்ந்து நடைபெறுகின்ற மீறுதல்களைக் கண்காணிக்கவும் இலங்கையில் அவ்வலுவலகமொன்றை ஸ்தாபித்தல் வேண்டும்.

4) மேலே 1) இல் கூறியதற்குப் பங்கமில்லாமல் ஐ. நா. பொதுச் சபையின் உபபிரிவாக, சீரியா சம்பந்தமாக உரு வாக்கப்பட்ட சாட்சிகளைச் சேகரிக்கின்ற பொறிமுறை போன்றதொன்றை (கடுமையான 12 மாத அவகாச நிபந்தனையோடு) ஏற்படுத்துதல்.

பொறுப்புக்கூறல் சம்பந்தமாக பலமான நடவடிக்கை எடுப்பதற்காக உயரிய தளங்களுக்கு இவ்விடயம் கொண்டுசெல்லப்படல் வேண்டும் என் பதை நாம் மீளவும் வலியுறுத்துகின்றோம்.

ஆகையால் இதுவரைக்கும் நீதி மறுக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தீர்க்கமாகவும் காலம் கடத்தாமலும் நடவடிக்கை எடுக்குமாறு நாம் உறுப்புநாடுகளிடம் வலியுறுத்துகின்றோம். – என்றுள்ளது.

(கடிதத்தின் விவரம் 05ஆம் பக்கத்தில்...)

## ஜி.சீ.ஈ. சாதாரண,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சேவைகள் பணிப்பாளர் நாயகம் இந்த மாதம் 15ஆம் திகதி தனியார் கல்வி நிறுவனங்களை நடத்துவதற்கான சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

சுற்றறிக்கையில் தெரிவிக்கட்டுள்ளதாவது:–

ஜனவரி 25ஆம் திகதி முதல் மேல் மாகாணத்திற்கு வெளியே கல்வி நிறுவனங்களை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு வகுப்பில் இருக்கை திறனில் 50 சதவீதம் வரை மற்றும் அதிகபட்சம் 100 மாணவர்களுக்கு மட்டுமே இடமளிக்க முடியும்.

இந்த கல்வி நிறுவனங்கள் க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தரம் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே திறக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

பின்னர் நாட்டின் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப பிற ஏனைய தரங்களில் பயிலும் மாணவர்களுக்கும் வகுப்புகளையும் ஆரம்பிக்க முடியும்.

பயிற்சி வகுப்புகளை எவ்வாறு நடத்துவது மற்றும் கடினமான நேரத்தில் வகுப்பறைகளை எவ்வாறு சுத்தம் செய்வது என்பது குறித்த வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் பிரேத்தியேக கல்வி வகுப்புகளை நடத்தும் ஆசிரியர்கள் இந்த சுகாதார வழிமுறைகளை சுற்றறிக்கையில் இருப்பதால் அவற்றைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேல் மாகாணத்தில் தனியார் கல்வி நிறுவனங்களை நடத்துவது மேலும் தாமதமாகும். மேல் மாகாணத்தில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குப் பின்னர் தனியார் வகுப்புகள் தொடங்க அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

பயணத்தடை மற்றும் தனிமைப் படுத்தல் நடைமுறைப்படுத்தும் பகுதிகளில் தனியார் கல்வி நிலையங்களை நடத்த முடியாது – என்றுள்ளது.

## செல்வம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அடியோடு மறுத்துரைத்தார்.

கொழும்பு இணையத் தளத் தகவல்களை மேற்கோள் காட்டி அந்தச் செய்தி பிரசுரமாகியிருந்தது.

"அப்படி ஏதும் முடிவு எடுக்கப்படவில்லை. இது ஆதாரம் – அடிப்படை – ஏது மற்ற தகவல். சம்பந்தனுக்கு நாம் அப்படி ஒரு கடிதம் எழுதவுமில்லை. தனித்து இயங்குவது என்று தீர்மானம் எதுவும் எடுக்கவுமில்லை" – என்று மறுத்துரைத்துள்ளார் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. (உ)

## 256 ஆக அதிகரித்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வயதான பெண்ணொருவரே சாவடைந்துள்ளார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 256 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 243 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் சாவடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று 416 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதில், யாழ். மாவட்டத்தில் ஏழு பேருக்குக் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் ஐவர் கோப்பாய் சிகிச்சை நிலையத்தில் உள்ளவர்கள். ஏனைய இருவரும் ஜம்புகோளப்பட்டினம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் உள்ளவர்கள்.

இதேவேளை, ஏனைய மூவரில் இருவர் வவுனியாவைச் சேர்ந்தவர்கள். மற்றையவர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர் – என்றார்.

## 52 ஆயிரத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 48 ஆயிரத்து 525 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண் ணிக்கை 52 ஆயிரத்து 309 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 44 ஆயிரத்து 746 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 7 ஆயிரத்து 307 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்றுவருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## மட்டக்களப்பில் 10...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தெரிவித்தார்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், காத்தான்குடி சுகாதாரப் பிரிவில் 4 பேருக்கும், ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 10 பேர் உட்பட 15 பேருக்குப் புதிதாக தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 440 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் ஐவர் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுமாறான பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் தொடர்ந்தும் சுகாதார வழிமுறைகளைப் பேணி அவதானமாக நடந்துகொள்ளுமாறு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுக்கொண்டார்.

# யாழ்.மாநகர மேயர் தெரிவில் சட்டத் தவறு ஏதும் இல்லை!




**யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் தெரிவும் முன்னாள் முதல்வர், மேற்படி முதல்வர் பதவிக்குப் போட்டியிட்டமையும், தற்போதைய முதல்வர் அப்பதவிக்குத் தகுதியானவரா என்பதும் தொடர்பிலான சட்ட ஆராய்வு இது.**

**● சட்டத்தரணி ஏ.இராஜரத்தினம்**

யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய முதல்வர் தெரிவு சம்பந்தமாக முன்னைய முதல்வர் மீண்டும் முதல்வர் தெரிவில் போட்டியிட்டமை தொடர்பிலும் யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய முதல்வர் யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட வாசி அல்லாதவர் என்ற அடிப்படையிலும் உள்ளூராட்சி சபைகள் தேர்தல் சட்ட விதிப்படி புதிய முதல்வர் மக்களால் தெரிவு செய்யப்படவில்லை என்ற அடிப்படையிலும் வாதப்பிரதிவாதங்கள் இருந்துகொண்டிருக்கின்றன.

அதே வேளை, யாழ்ப்பாண மாநகர சபையின்



உறுப்பினர் ஒருவரால் மேற்குறித்த விடயங்கள் சர்ச்சையாகக் காட்டப்பட்டு, வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் குறித்த விடயம் தொடர்பாக அதிகாரம் இல்லாது செயல்பட்டார் எனவும் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாகவும் குற்றம் சுமத்தப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், உள்ளூராட்சி தேர்தல் சட்டம் ஆகியவற்றில் இடம்பெறும் விதிகளை ஆராய்வதன் மூலம் குறித்த விடயம் தொடர்பாக வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அதிகாரத்திற்கு உட்பட சட்டரீதியாக நடந்தாரா? இல்லையா? என்பன அறிய முடியும்.

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் பிரிவு 14(1)இன் படி "ஒவ்வொரு மாநகர சபைக்கும் ஒரு முதல்வர், ஒரு பிரதி முதல்வர் இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட மாநகர சபை உறுப்பினர்களாகவும் இருத்தல் வேண்டும்" என இடம்பெறுகின்றது. உள்ளூராட்சி சபைகள் தேர்தல் சம்பந்தமாக தற்போது நடைமுறையிலுள்ள சட்டப்படி வட்டாரப் பிரதிநிதித்துவமும் விகிதாசார அடிப்படையில் கட்சிகளுக்குக் கிடைத்த வாக்கின் அடிப்படையிலும் ஒவ்வொரு கட்சியும் சுயேச்சைக்குழுவும் பெற்ற வாக்கு அடிப்படையிலும் அங்கத்தவர் எண்ணிக்கை கணிக்கப்பட்டு தேர்தல் ஆணையாளரால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் என வெளிப்படுத்தப்பட்ட வகையில் தற்போதய முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் அவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)கட்சியின் தெரிவாகிய உறுப்பினராக தற்பொழுது இருந்து வருவதில் இருவேறுபட்ட கருத்து இருக்கமுடியாது.

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் வதிவிடத்தைக் கொண்டிருக்கவில்லை என்ற தகைமையீனம் நீதிமன்றில் காலதாமதம் இல்லாது உட்படுத்தப்பட்டு தீர்ப்புப் பெற்றுக்கொள்ளவே தீர்ப்பு சட்டம் அமைகின்றது. ஏற்கனவே மேன்முறையீட்டு நீதிமன்றில் குறித்த விடயம் தொடர்பான வழக்குத் தாக்கல் செய்த கட்சியால் அவ்வழக்கு கைவாங்கப்பட்ட நிலையில் வதிவிட தகைமையீனம் என்ற குற்றச்சாட்டு எழ இடமில்லை என்பதே அபிப்பிராயமாகும். தற்போதைய முதல்வாரன மணிவண்ணன் அவர்கள் அவர் அங்கம் வகிக்கும் கட்சி நீக்கியதாக தோதல் ஆணையாளருக்கு அவர் அங்கம் வகிக்கும் கட்சி அறிவித்திருந்தாலும் இவ்விடயம் தொடர்பில் தேர்தல் ஆணையாளரது தெளிவுறுத்தல் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு, யாழ் மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பியிருந்தால் மட்டுமே கட்சியிலிருந்து நீக்கப்பட்டவராக சட்டப்படி கருதப்படலாம். இந்த வகையினும் எவ்வித தவறான அணுகுமுறையையும் உள்ளூராட்சி நிர்வாக அதிகாரிகள் புரிந்திருக்கவில்லை என்றே கருத இடமுண்டு.

முன்னைநாள் முதல்வர் மீளவும் முதல்வர் போட்டியில் பங்குபற்ற முடியுமா? இவரது 'பதவி இல்லா தொழிந்தவுடன்' யாழ் மாநகர சபை உறுப்பினராகவும் (உறுப்பாண்மையும்) இல்லாதாகிவிட்டதா? என்ற விடயத்தை ஆராயும் பொழுது மாநகர சபைக் கட்டளைச் சட்டம் 14(3), 14(பி) ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி (விசேட ஏற்பாடு) சட்டம் 2012 பிரிவு 7, என்பவையும் நோக்கப்பட வேண்டியவையாகும்.

மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் பிரிவு 14(2)(ஏ)(ய) இன் மாநகர சபையின் முதல்வர், பிரதி முதல்வர் தமது பதவிகளிலிருந்து தாமாகப் பதவி விலகின் அல்லது தாமாக பதவியை விட்டு வெளியேறினாலன்றி வகுக்கப்பட்ட காலம் வரை அப்பதவியும் உறுப்பாண்மையும் தொடர்ந்திருக்கும் என்ற ஏற்பாடு காணப்படுகிறது.

இந்த வகையில் முன்னைநாள் முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் குறித்த மாநகர சபைக் கட்டளைச் சட்டம் பிரிவு 14(1) இன்படி இரண்டாவது தடவையாக பாதீடு தோல்வி அடைந்தமையால் குறித்த 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபை (விசேட சட்ட ஏற்பாடு) பிரிவு 7இன்படி தனது முதல்வர் பதவியிலிருந்து விலகியதாகக் கருதப்படுவதால் அவரது மாநகர சபை உறுப்பாண்மை இருந்து கொண்டிருப்பதால் மீள முதல்வர் பதவிக்குப் போட்டியிடுவதில் சட்டம் வெளிப்படையாக தடை எதையும் விதிக்காத வகையில் போட்டியிடுவதை உள்ளூராட்சி ஆணையாளரோ யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரோ தடை செய்ய சட்டப்படி அதிகாரம் கொண்டிருக்கவில்லை என்றே அபிப்பிராயப்பட வேண்டும்.

குறிப்பாக பிரிவு 14(2)(பி) முதல்வர் பதவி துறத்தல் பற்றி மட்டுமே கூறி அச்சந்தர்ப்பத்தில் மட்டுமே பதவியும் உறுப்புரிமையும் இழப்புப்படி கூறுவதால் போட்டியிட வாய்ப்பு இருந்துள்ளதென்றே கொள்ள வேண்டும்.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் நடத்தப்பட்ட



புதிய முதல்வர் தெரிவு தேர்தல் அதிகாரத்திற்குட்பட்ட முறையில் நடைபெற்றுள்ளதாகக் கொள்ள இடமிருப்பதால் அவர் மீதோ உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் யாழ் மாநகர சபை ஆணையாளர், செயலாளர் மீதோ குற்றம் சுமத்துவதற்கு இடமிருக்காது என்பதே எனது அபிப்பிராயமாகும்.

## இரண்டு வாரங்களுக்குள் கொரோனாத் தடுப்பூசி!



கொரோனா தடுப்பூசி எதிர்வரும் இரண்டுவார காலப் பகுதிக்குள் நாட்டுக்கு கிடைக்கப் பெறும் என எதிர்பார்ப்பதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இதன்படி அஸ்ட்ராஜெனெகா மற்றும் பைஸர் பயோஎன்டெக் ஆகிய தடுப்பூசிகளை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் உலக சுகாதார அமைப்பு உட்பட வெளிநாட்டு அரசாங்கத்தின் பலருடன் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தயாரிக்கப்படுகின்ற ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் அஸ்ட்ராஜெனெகா கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பலாங்கொடை, எம்பிலிப்பிட்டிய சபைகளும் உப தலைவர்களிடம்!

பலாங்கொடை மற்றும் எம்பிலிப்பிட்டி நகர சபைகளின் தலைவர்களின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், பலாங்கொடை மற்றும் எம்பிலிப்பிட்டிய நகர சபைகளின் தலைவர்களை பதவிகளிலிருந்து விலக்குவதற்கு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கரி கொப்பேகடுவ நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதனடிப்படையில் பலாங்கொடை மற்றும் எம்பிலிப்பிட்டிய நகர சபைகளின் அதிகாரங்களை உப தலைவர்களுக்கு வழங்குவதற்கு வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

நகர சபை சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் இந்த இருவரையும் பதவி விலக்க, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கரி கொப்பேகடுவ வர்த்தமானி ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரத்தினபுரியில் குழந்தைப் பிரிவு வைத்தியருக்கு கொரோனா உறுதி!

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் மேலும் இரண்டு வைத்தியர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட வைத்தியர்களில் ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர் எனவும் மற்றைய வைத்தியர் வைத்தியசாலையின் குழந்தைகள் விடுதியில் பணிபுரிந்து வந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் இருவரும் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொற்றுத் தடுப்புச் சட்டத்தை மீறிய 35 பேர் கைதாகினார்கள்

கடந்த 24 மணி நேரத்தில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 35 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறுவோர் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டிலேயே கடந்த 24 மணி நேரத்தில் இந்த 35 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரை முகக்கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் இதுவரை 2 ஆயிரத்து 549 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைப் பின்பற்றாத 213 நிறுவனங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட சட்ட விதிகளைப் பின்பற்றத் தவறிய 213 அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மேல் மாகாணத்தில்அடையாளம் காணப்பட்டன. எனவே இந்த நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தமிழரின் தீர்மானம் சரியா?

ஜெனீவா ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலின் விடயத்தில் தமிழ்த் தேசியத் தரப்புகள் ஒன்று சேர்ந்து – ஐக்கியப்பட்டு – ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்கின்றமை தமிழர் ஆதரவு மட்டங்கள் பலவற்றினாலும் சிலாகிக்கப்படுகின்றது. இத்தகைய தீர்மானத்துக்கு வெற்றிகரமாக ஐக்கியப்பட்டு வந்தமைக்காகத் தமிழ்த் தேசியக் கட்சிகள், அமைப்புகள், சிவில் கட்டமைப்புகள், இயக்கங்களை பல தரப்புகளும் – குறிப்பாக புலம்பெயர் தரப்புகள் எல்லாம் – சிலா கிக்கின்றன.

எல்லோரையும் – எல்லாத் தரப்புகளையும் – திருப்பதிப்படுத்தும் விதத்தில் எட்டப்பட்ட இந்த இறுதித் தீர்மானம் புத்திசாதுரியமானதா, காத்திரமானதா, உள்ளதுக்குள் வள்ளிசான முடிவா என்பதைக் காலம்தான் கணிக்கும்.

எனினும், எடுத்த எடுப்பில், ஆஹா, ஒஹோ என்று புகழக்கூடிய முடிவு அல்ல இது என்ற எமது கருத்தை நேரத்துடனேயே பதிவு செய்ய விரும்புகிறோம்.

இவ்விடயத்தை ஒட்டிக் காலங்காலமாக – கடந்த பத்து வருடங்களாக – தனித் தனித் தரப்புகளாக நின்று, தத்தமது கருத்தியலே சரியானது என்று குரல் எழுப்பியவர்களின் எல்லாக் கருத்துக்களும் ஒரு கட்டுக்குள் அடக்கப்பட்டிருக்கின்றது என்ற வகையில் அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே மகிழலாம்.

ஆனால், அந்தக் கூட்டுச் சாம்பார் பொருத்தமானதா என்பதைக் காலம்தான் கணிக்க வேண்டும். இந்தத் தீர்மானத்தை – ஏகமனதாக முடிவை – குறை சொல்வதோ, கண்டித்து விமர்சிப்பதோ எமது நிலைப்பாடல்ல. அதையும் தாண்டி இந்தத் தீர்மானத்துக்குள் இருக்கும் வில்லங்கங்களையும் நாம் கவனிக்க வேண்டும் என்பதைச் சுட்டுவதுதான் நமது கருத்து.

தமிழர் தரப்பின் கோரிக்கைப்படி, 'பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கையை இணங்க் வைத்து நடவடிக்கைகளை எடுப்பதற்கு கடந்த பத்து ஆண்டுகளாக ஜெனீவா கவுன்ஸிலில் மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் போதும், இனியும் இதில் நீங்கள் (ஜெனிவா கவுன்ஸில்) சாதித்துச் செயலாற்றுவதற்கு எதுவுமில்லை. ஆகவே காலத்தை மேலும் வீணடிக்காமல், விடயத்தை ஐ.நா பொதுச் சபையிடமோ, பாதுகாப்புச் சபையிடமோ, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திடமோ கையளிக்க நடவடிக்கை எடுங்கள்' – என்பதுதான் செய்தி.

இதில் மறுத்துரைக்க எதுவுமில்லை. ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸில் எதுவும் செய்ய லாயக்கற்றது என்பது உண்மைதான்.

யுத்தத்தின் போது நடந்து முடிந்த விடயங்களுக்கு இலங்கையைப் பொறுப்புக் கூற வைக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசின் இணக்கமின்றி இந்தக் கவுன்ஸிலால் எதுவும் செய்ய முடியாது என்றால், இனிமேல் இலங்கையில் தொடர்ந்து இடம்பெறும் மீறல்களைக் கண்காணித்துத் தடுக்கவும் கூட, இந்தக் கவுன்ஸில் லாயக்கற்றதுதான்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் பத்து வருடங்களாகச் செயலற்று – லாயக்கற்று – போன கவுன்ஸிலிடம் கடந்த காலத்துக்கு நியாயம் பெறமுடியாது எனின், நிகழ்காலத்துக்கு நியாயம் பெறலாம் என்று கருதி அதன் கண்காணிப்பு அலுவலகம் ஒன்றை இலங்கையில் ஸ்தாபிக்கக் கோருவதும் அர்த்தமற்றது.

ஜெனிவாவில் இந்த விடயத்தில் ஏதும் சாதிக்க முடியாது என்றால், ஐ.நா பாதுகாப்புச் சபை, பொதுச் சபை இருக்கும் நியூயோர்க்கில் பல 'உள்வீட்டு வேலைகளை' (Home work) –தயார்ப்படுத்தல்களை செய்து விட்டுத்தான் ஜெனிவாவைத் துறக்க வேண்டும்.

இலங்கையின் யுத்தத்தில் இறுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஏற்கனவே இரண்டு சர்வதேசப் பொறிமுறைகளின் கீழ் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒன்று – ஐ.நா செயலாளர் 2010 ஜூனில் நியமித்த சர்வதேச நிபுணர்கள் மூவரடங்கிய தருஸ்மன் குழு. அதன் பின்னர் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு. அவை பதிவு செய்த சாட்சியங்கள் இருபது வருடங்களுக்குப் பாதுகாப்பாக சேமிக்கப்பட வேண்டும் என்ற சர்வதேச தீர்மானம் உண்டு. அப்படி இருக்கையில் சாட்சியங்களைப் பதிவு செய்வதற்கு – சிரியாவுக்குச் செய்தது போன்ற பாணியில் – மேலும் ஒரு குழு அமைக்கக் கோருவதும் அர்த்தமற்றதாகவே படுகின்றது. ஏற்கனவே கால அவகாசம் வேண்டாம் என்றவர்கள் இக்குழு அமைக்க ஒரு வருடம் கால அவகாசம் கொடுக்க முன்வந்துள்ளனர்.

மகன் படிக்கும் பாடசாலை சரியில்லை என்றால் வேறு பாடசாலையில்தான் மகனைச் சேர்க்க வேண்டும். புதிய – பொருத்தமான – பாடசாலையை ஆயத்தப்படுத்தாமல் பழைய பாடசாலையிலிருந்து மகனை வெளியே எடுத்தால், மகன் படிப்பின்றி காலத்தைக் கழிக்க வேண்டியதுதான்.

ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலிருந்து பொறுப்புக் கூறலை விலக்கும் விதத்தில் நடந்து கொண்டால் அந்த விடயத்தை ஐ.நா பொதுச் சபையிலோ, பாதுகாப்புச் சபையிலோ, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலோ நகர்த்தும் வாய்ப்பு கிஞ்சித்தாவது இருக்க வேண்டும்.

பொறுப்புக் கூறல் விடயத்தில் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் காத்திரமாக ஏதும் செய்யாது என்று முடிவெடுப்போமாயின், அதே காரணங்களுக்காக நிலைமாறு கால நீதியின் மற்றைய மூன்று விடயங்களின் – உண்மையைக் கண்டறிதல், இழப்பீடுகளை வழங்கச் செய்தல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் ஆகிய விடயங்களிலும் – அதே காரணத்துக்காக ஜெனிவா ஏதும் செய்ய முடியாது என்பதுதான் உண்மை.

ஜெனிவா கவுன்ஸில் மீதான முழு நம்பிக்கையையுமே துறக்கும் தமிழர் தரப்பின் இந்தத் தீர்மானம் இலங்கையைப் பொறுத்தவரை ஒரு வகையில் அதற்கு வரப்பிரசாதமே.

## மேல் மாகாணத்தில் இருந்து வருவோருக்கு வடக்கில் தனிமைப்படுத்தல் முறை இல்லை!



### கேதீஸ்வரன் அறிவிப்பு

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைவாக மேல் மாகாணம் உள்ளிட்ட கொரோனா வைரஸ் தொற்று அபாய வலயங்களிலிருந்து வருகை தருவோரை சுயதனிமைப்படுத்தும் நடவடிக்கை வடக்கு மாகாணத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த தகவலை வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணம் மற்றும் அம்பாறையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து வடக்கு மாகாணத்துக்கு வருகை தருவோரை 14 நாள்களுக்கு சுயதனிமைப்படுத்தி பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கை சுகாதாரத் துறையினரால் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், அதனை இடைநிறுத்துமாறு சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு இன்று (நேற்று) சுற்றறிக்கை மூலம் பணிக்கப்பட்டதாக கேதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அவசர தேவை ஏற்பட்டால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் விண்ணப்பித்து, அவரது அனுமதியுடனேயே அபாய வலயங்களிலிருந்து அபாயம் குறைந்த வலயங்களுக்கு வருபவர்களை சுயதனிமைப்படுத்த முடியும் என கேதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

## சரவணபாபா அறக்கட்டளையால் முல்லைத்தீவில் வீடு நிர்மாணம்!





வன்னியின் முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன் கட்டு கிராமத்தில் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வரும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான நிரந்தர வீடு அமைத்து கொடுக்கும் பணியை பிரித்தானிய – ஓம் சரவணபாபா அறக்கட்டளையினர் – முன்னெடுத்துள்ளனர்.

அந்த வகையில், முத்தையன்கட்டு பிரதேசத்தில் நிரந்தரமான வீடு ஒன்று இல்லாததால் பல்வேறு சொல்லணாத் துன்பங்களை அனுபவித்தது வந்த பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றுக்கான வீடமைப்பு திட்டத்துக்கான அத்திபாரம் தைப் பொங்கல் நாளான தை முதல் நாள் இடப்பட்ட்து.

14.01.2021 அன்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், முத்தையன்கட்டு கிராம சேவையாளர், கிராமஅபிவிருத்திச் சங்கத்தினர், மாதர்சங்க உறுப்பினர், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், வானவில் ஊற்றுக்கழகத்தை சேர்ந்தோர், கமக்கார அமைப்பின் செயலாளர், சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர், பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் ஆகியோரும் அந்த கிராமத்தவர்களும் கலந்து கொண்டனர்.

## கம்பஹாவில் முகமூடியுடன் வந்த இருவர் தனியார் நிதிநிறுவனம் ஒன்றில் கொள்ளை!

மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவர் தனியார் நிதி நிறுவனமொன்றில் பெரும் கொள்ளையில் ஈடுபட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கம்பஹா மிரிஸ்வத்த பகுதியிலுள்ள நிதி நிறுவனமொன்றிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

4 கோடி ரூபா பெறுமதியான பணம் மற்றும் தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்த 5 பொலிஸ் குழுக்கள் களத்தில் இறக்கப்பட்டுள்ளன.

## 47 ஆயிரத்து 683 பேருக்கு யாழில் இதுவரை பி.சி.ஆர்.!

யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் இதுவரை 47 ஆயிரத்து 683 பேருக்கு கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ். போதனா வைத்தியசாலையில் இதுவரை 41 ஆயிரத்து 248 பேருக்கும், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் ஆறாயிரத்து 435 பேருக்கும் கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பரிசோதனைகளில் 644 பேருக்குக் கொரோனாத் தொற்று இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்று பரவல் நெருக்கடியில் யாழ். போதனா வைத்தியசாலை கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுடன் ஏனைய சிகிச்சைகளையும் தடையின்றி மேற்கொண்டு வருகின்றது.

எனவே, குருதி அமுக்கம், சலரோகம், இருதயநோய்போன்றநீண்டநாள்நோயாளிகள் கிரமமாக அவர்களுக்குரிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதாவது, கடந்தகாலப் பகுதிகளில் அதிக குருதி அமுக்கம் மற்றும் இருதய நோயுடைய சிலர் உரிய நேரத்தில் வைத்தியசாலைக்கு வருகைதராமல் உயிரிழந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இது தவிர்க்கப்பட வேண்டும்.

மேலும், 2020 ஆம் ஆண்டு டெங்கு நோய்த் தாக்கத்தால் 866 பேர் சிகிச்சைபெற்று வெளியேறி இருக்கின்றார்கள். இது, 2019 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது குறைவாகவே காணப்படுகின்றது. எனினும், தற்போது மழைகாலம் என்பதால் டெங்கு பரவக்கூடிய அபாயம் காணப்படுவதால் பொதுமக்கள் விழிப்பாக இருக்கின்றமை அவசியமாகும். – என அவர் தெரிவித்துள்ளார்.

**அடுத்த மாத இறுதியில் ஜெனிவாவில் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46 ஆவது அமர்வில் இலங்கை விவகாரம் பிரதானமாக ஆராயப்படவுள்ளது. அவ்விடயத்தில் அங்கத்துவ நாடுகள் எத்தகைய நிலைப்பாட்டைக் கைக்கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் தமிழ்த் தேசியத் தரப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து பொதுக் கோரிக்கை முன்வைத்திருக்கின்றன. தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் இவ் விடயத்தில் ஒன்றுபட்டு – ஒருமித்த – நிலைப்பாட்டை எடுத்திருப்பது கவனிக்கத்தக்க திருப்பு முனையாகும்.**

**இவ் விடயத்தில் அத் தரப்புகள் எல்லாம் ஒன்று சேர்த்து முன்வைத்துள்ள கோரிக்கையின் முழு வடிவம் வருமாறு:-**

## ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு

# தமிழர் தரப்புகள் ஒன்றிணைந்து கோரிக்கை



**15 ஜனவரி 2021**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 47 உறுப்பு நாடுகளின் தூதரகங்களுக்கு:**

**மாண்புமிகு தூதர்களே,**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் 46 ஆவதுகூட்டத்தொடரில் தீர்க்கமான நடவடிக்கை எடுக்குமாறு கோரல்

இலங்கையின் நிலைமை குறித்து ஆராயப்படவுள்ள ஐக்கியநாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடருக்கு ஆயத்தமாகிற இவ்வேளையில், இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள், தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், பாதிக்கப்பட்ட சமூகங்களின் உறுப்பினர்கள் மற்றும் தமிழ் சிவில் அமைப்புக்கள் ஆகிய நாம் இக்கடிதத்தினை எழுதுகிறோம்.

இலங்கையின் இனப்பிரச்சினையால் ஏற்பட்ட ஆயுதப்போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு வாரகாலத்துக்குள் இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா.செயலாளர் நாயகத்தோடு 23 மே 2009 ஆம் திகதி விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில், பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:–

‘இலங்கை தனது சர்வதேச கடப்பாடுகளுக்கும், சர்வதேச மனித உரிமை விழுமியங்களுக்கும் அமைவாக, மனித உரிமைகளை பாதுகாக்கவும், வளர்க்கவும் தாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை இலங்கை மீண்டும் வலியுறுத்தியது. சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்டங்கள் மீறப்பட்டமையை விசாரிப்பதற்கான பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்றின் முக்கியத்துவத்தை செயலாளர் நாயகம் வலியுறுத்தினார். இந்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்’

மேற்சொன்ன உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அர்த்தமுள்ள நடவடிக்கை எதுவும் எடுத்திராத பின்புலத்தில், இலங்கையில் நிகழ்ந்த ஆயுதப் போராட்டத்தின், இறுதிக்கட்டங்களில் எழுந்த மனித உரிமைகள் பொறுப்புக்கூறல் விடயங்களை ஆராய்வதற்கென்று, 22 ஜூன் 2010 இல் மூவர் அடங்கிய குழு ஒன்றை செயலாளர் நாயகம் நியமித்தார். நிபுணர்கள் குழுவின் இந்த அறிக்கை மார்ச் 2011 இல் செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டது. இதன் பின்பு செப்டெம்பர் 2011 இல் இவ்வறிக்கையை செயலாளர்நாயகம் ஐ.நா. மனித உரிமை பேரவை தலைவரிடத்திலும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடத்திலும், பாரப்படுத்தினார்.

பின்பு ஐ.நா.மனித உரிமைப் பேரவை ‘இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் ஊக்குவித்தல்’ என்ற19/02 தீர்மானத்தை நிறைவேற்றியது. அதன்பின்பு

இவ்விடயத்தை தன்னகத்தே வைத்திருந்து மார்ச் 2013 இலும் மார்ச் 2014 இலும் தீர்மானங்கள் நிறைவேற்றியது. மேலும்தீர்மானங்கள் 30/01 (ஒக்டோபர் 2015), 34/01(மார்ச் 2017) மற்றும் 40/01 (மார்ச் 2019) ஆகியவற்றிற்கு இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது.

இலங்கையின் அரசியல் வெளியில் இரண்டு பிரதான அரசியல்கட்சிகள் உள்ளடங்கலாக, அரசியல் தலைவர்கள், விதிவிலக்கு இல்லாமல், இலங்கையின் படைத்தரப்பினரை நீதி விசாரணையிலிருந்து பாதுகாப்போம் என்று கூறிவந்துள்ளார்கள். ஓர் உள்ளூர் பொறிமுறை மூலமாக இலங்கையில் பொறுப்புக்கூறலை ஏற்படுத்த முடியாது என்பதை உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இராணுவ மயமாக்கல், அரசியல் கைதிகளை கால வரையறையின்றி தடுத்து வைத்திருத்தல், தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் நில அபகரிப்பு, மேய்ச்சல் தரை போன்ற தமிழ் மக்களின் பாரம்பரியமானதும் கூட்டு நில உரிமைகளை மறுப்பது, அரசியல் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களை கண்காணிப்பதை தீவிரப்படுத்துதல், கொவிட் – 19 ஆல் இறக்கும் முஸ்லிம் சகோதரரின் ஜனாஸா அடக்கத்தை மறுத்தல், நினைவேந்தல் உரிமையை மறுத்தல் போன்ற தமிழ் மக்களுக்கு எதிராக தீவிரமாக்கப்பட்டிருக்கும் ஒடுக்குமுறையானது மோசமாகி கொண்டிருக்கும் சூழ்நிலையை கோடிட்டுக் காட்டுகின்றன.

ஐ.நா.மனித உரிமைப் பேரவை பெப்ரவரி, மார்ச் மாதங்களில் தீர்மானம் 40/01 இன் கீழ் இலங்கை அரசாங்கம் உறுதிமொழி கொடுத்த விடயங்கள் சம்பந்தமாக ஆராய்வதற்காக கூடுகையில் இவ்வாறான முடிவெடுத்து இறுதித்தீர்மானமொன்றை நிறைவேற்ற வேண்டும்.

இத்தீர்மானமானது, இனப்பிரச்சினையால் ஏற்பட்ட ஆயுதப்போராட்டத்தின் போது இழைக்கப்பட்ட இனப்படுகொலை, மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், யுத்த குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களை விசாரிக்கும் பொறுப்பிலிருந்து இலங்கை தவறிவிட்டதென்றும், இதனை ஓர் உள்ளூர் பொறிமுறைமூலமாகவோ அல்லது கலப்புப் பொறிமுறை மூலமாகவோ இலங்கை செய்யும் என்பதற்கான வாய்ப்பு இல்லை என்று பிரகடனப்படுத்த வேண்டும்.

நாம் பின்வருவனவற்றைக் கோருகிறோம்:–

1) இலங்கையை இனப்படுகொலை, மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், யுத்த குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களை விசாரிப்பதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கும் வேறு பொருத்தமானதும் செயற்படுத்தக் கூடியதுமான சர்வதேசப் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளுக்கும் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐ.நா. பொதுச்சபை, ஐ.நா. பாதுகாப்புச்சபை போன்றவை எடுக்க வேண்டுமென்று இப்புதிய தீர்மானத்தில் உறுப்பு நாடுகள் வலியுறுத்த வேண்டும்.

2) ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் தலைவர் இவ்விடயத்தை மேல் கூறப்பட்டபடி நடவடிக்கைக்காக மீளவும் செயலாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

3) ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகரின் அலுவலகம் இலங்கையில்தொடர்ந்துநடைபெறுகின்ற மீறுதல்களை கண்காணிக்கவும் இலங்கையில் அவ்வலுவலகமொன்றை ஸ்தாபித்தல் வேண்டும்.

4) மேலே (1) இல் கூறியதற்கு பங்கமில்லாமல் ஐ.நா. பொதுச் சபையின் உப பிரிவாக, சிரியா சம்பந்தமாக உருவாக்கப்பட்ட சாட்சிகளை சேகரிக்கிற பொறிமுறை போன்றதொன்றை (IIIM) கடுமையான 12 மாத அவகாச நிபந்தனையோடு ஏற்படுத்துதல்.

**இலங்கையின் அரசியல் வெளியில் இரண்டு பிரதான அரசியல்கட்சிகள் உள்ளடங்கலாக, அரசியல் தலைவர்கள், விதிவிலக்கு இல்லாமல், இலங்கையின் படைத்தரப்பினரை நீதி விசாரணையிலிருந்து பாதுகாப்போம் என்று கூறிவந்துள்ளார்கள். ஓர் உள்ளூர் பொறிமுறை மூலமாக இலங்கையில் பொறுப்புக்கூறலை ஏற்படுத்த முடியாது என்பதை உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது.**

பொறுப்புக்கூறல் சம்பந்தமாக பலமான நடவடிக்கை எடுப்பதற்காக உயரிய தளங்களுக்கு இவ்விடயம் கொண்டுசெல்லப்படல் வேண்டும் என்பதை நாம் மீளவும்வலியுறுத்துகிறோம்.

ஆகையால் இதுவரைக்கும் நீதி மறுக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தீர்க்கமாகவும் காலம் கடத்தாமலும் நடவடிக்கை எடுக்குமாறு நாம் உறுப்பு நாடுகளுக்கு வலியுறுத்துகிறோம்.

– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், தமிழ் மரபுரிமை இயக்கத்தை சேர்ந்த வண.பிதா. லியோ ஆம்ஸ்ட்ரோங், கிழக்கு மாகாண சிவில் சமூக அமைப்பைச் சேர்ந்த சபாரத்தினம் சிவயோகநாதன், அம்பாறை சிவில் சமூக அமைப்பின் தலைவர் இராசலிங்கம் விக்னேஸ்வரன், தமிழ் சிவில் சமூக அமைப்பின் பொதுச் செயலாளர் அமரசிங்கம் கஜேந்திரன்,வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்பின் தலைவி யோகராசா கனகரஞ்சினி தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத் தலைவர் சுப்பிரமணியம் சிவகரன், சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள், திருகோணமலை ஆயர் வண. கலாநிதி நொயல் இமானுவேல் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# இழந்த போதனைக் காலத்துக்காக மேலதிக வகுப்புகளை நடத்துங்கள்!

## நிர்வாகிகளுக்கு ஒரு பகிரங்க மடல்

●பிருந்தாபன் பொன்ராசா

**வடமாகாண கல்விப் பணிப்பாளர்,**
**வலய மற்றும் பிரதி கல்விப் பணிப்பாளர்களின் கவனத்திற்கு,**

கொரோனா காரணமாக கடந்த (2020) வருடத்தில் மாணவர்களின் கல்வி மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இது உலகளாவிய பிரச்சினைதான். எனினும், வடக்கு மாகாணத்தில் இதன் பாதிப்பு அதிகமாகவே உணரப்பட்டுள்ளது.

கல்வியில் அக்கறையுடைய பெற்றோர்களும் அரச உத்தியோகத்தர்களும் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக ஒன்லைன் மூலம் கற்பித்துக்கொண்டிருந்தனர்.

தமது மாணவர்களின் கல்வி பாதிக்கப்படக்கூடாது என அதிக ஆர்வம் எடுத்து கற்பிக்கும் ஆசிரியர்களும் ஏதோ ஒரு வகையில் மாணவர்களுக்கு தொடர்ந்து கற்பித்துக்கொண்டிருந்தனர்.

விசேட வகுப்புக்கள் மற்றும் சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்துவதன் மூலம் இழந்த கல்வியை மீட்க முடியும். இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

யாழ்ப்பாணத்தில் உள்ள பல பாடசாலைகளில் கடந்த வருடம் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையை நோக்கினால், கிராமப்புறங்களில் ஒருபோதுமே சித்தியை பெறாத சில பாடசாலைகளின் பெறுபேறுகள் கணிசமாக உயர்ந்திருந்தன.



காரணம், நகர்ப்புற பாடசாலைகள் இயங்க முடியாத சூழ்நிலையிலும் கிராமப்புறங்களில் உள்ள சில பாடசாலைகளில் மாணவர்கள் வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு மாத்திரம் விசேட கற்பித்தல் நடைபெற்றுக்கொண்டே இருந்தது.

அதேவேளை, பல கிராமப்புற பாடசாலைகளில் ஒருவரேனும் சித்தியைப் பெற்றுக்கொள்ளவில்லை. காரணம், தனியார் வகுப்புக்களுக்குச் செல்லாமல் பாடசாலைகளை மட்டும் நம்பியிருந்த மாணவர்களுக்கு பாடசாலைகளில் கற்பித்தல் நடைபெறாமையால் அவர்கள் பாதிக்கப்பட்டனர்.

இதேபோன்றே 2020, 2021 க.பொ.த. சாதாரண தர பெறுபேறுகளும் அமையப்போகின்றன என பெற்றோர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிராமப்புறங்களில் உள்ள சில பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு கொரோனா விடுமுறை காலத்திலும் ஆசிரியர்கள் உரிய சுகாதார விதிகளைக் கடைப்பிடித்து கற்பித்துக்கொண்டிருந்தனர். அதிபர்களின் தற்துணிபின் அடிப்படையில் இந்த வகுப்புக்கள் நடைபெற்றன.

அதேபோன்று, பல ஆசிரியர்கள் ஒன்லைன் மூலமாக தமது மாணவர்களுக்கு கற்பித்துக்கொண்டிருந்தனர். ஆனால், பல கிராமப்புற பாடசாலை மாணவர்களுக்கு அந்த வாய்ப்புக்கூட கிடைக்கவில்லை. இதனால் எதிர்வரும் மார்ச் மாதம் பரீட்சைக்கு தோற்றவுள்ள பல கிராமப்புற மாணவர்களின் எதிர்காலம் சூனியமாகப்போகின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது.

அதேபோன்றே, தற்போது பாடசாலைகள் ஆரம்பித்திருக்கும் நிலையில் கடந்த வருடம் தரம் 10 இல் கற்ற மாணவர்களுக்கு பாடத்திட்டங்கள் பூர்த்தியாக்கப்படாமல் தரம் 11 இற்கான பாடத்திட்டம் கற்பிக்கப்படுகின்றது என பெற்றோர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தரம் 10 மற்றும் 11 பாடத்திட்டங்களின் அடிப்படையிலேயே க.பொ.த சாதாரண தர வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படுகின்ற நிலையில், தரம் 10 பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படாமையானது மாணவர்களை பெரிதும் பாதித்துள்ளது. இவர்களும் சித்தியடைய முடியாத நிலை ஏற்படப்போகின்றது.

இது தொடர்பாக வடக்கு மாகாண மற்றும் வலய, பிரதி கல்விப் பணிப்பாளர்கள் கூடிய கரிசனை செலுத்தவேண்டும். விசேட வகுப்புக்கள் மற்றும் சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்துவதன் மூலம் இழந்த கல்வியை மீட்க முடியும். இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

(எனது இப்பதிவு எந்தவொரு அதிபர், ஆசிரியர்களையும் குற்றஞ்சாட்டுவதற்கானது அல்ல, கிராமப்புற மாணவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றுவதற்கானது மட்டுமே)


# மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

**நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.**

**விலை - 150/=**







**கற்பகவனம் விற்பனை நிலையம்.**
**461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ் முற்றம் - Yarl Muttam)**
**021 492 7778**


## கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கொரோனா வைத்தியசாலையில் 154 தொற்றாளர்கள் சிகிச்சையில்!

கிளிநொச்சி கொரோனா சிகிச்சை நிலையத்தில் 154 பேர், தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தொற்றுநோயியல் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாண தொற்று நோய் வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள கொவிட் -19 சிகிச்சை நிலையத்தில் 154 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 96 ஆண்களும் 58 பெண்களும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவர்களில் 5 - 13 வயதுடையவர்கள் இருவரும் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஏழு பேரும் அடங்குகின்றமையுடன் ஏனையோர் இடை வயதுடையவர்கள் எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை குறித்த சிகிச்சை நிலையத்திலிருந்து சிகிச்சை பெற்றுவந்த 18 பேர் வெளியேறியுள்ளன எனவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொவிட் 19 சிகிச்சை நிலையமாக கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தில் அமைந்துள்ள தொற்று நோய் வைத்தியசாலை சேவையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஐ.தே.க. மீண்டெழும்!

## புதிய பொதுச்செயலாளர் நம்பிக்கை

1977ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய தேசியக்கட்சி பலமாக இருந்தது. வடக்கு, கிழக்கு உட்பட அனைத்துத் தொகுதிகளிலும் அமைப்பாளர்கள் இருந்தனர். அதேபோன்றதொரு நிலைக்கு கட்சி மீண்டும் கட்டியெழுப்பப்படும்.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சியைப் பலப்படுத்துவதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டு, அதன்பிரகாரம் நாடு முழுவதும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

குறிப்பாக தற்போதைய அரசு ஜனநாயக விரோத வழியில் பயணிக்கின்றது. அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியில் பல பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அவற்றிலிருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் எமது அரசியல் பயணம் தொடரும்.

ஐக்கிய தேசியக் கட்சி என்பது இன, மத, மொழி, குல பேதங்களுக்கு அப்பால் அனைவரையும் அரவணைத்துக் கொண்டு முன்நோக்கிப் பயணிக்கக் கூடிய கட்சியாகும்.

1977ஆம் ஆண்டில் நாட்டில் அனைத்துத் தொகுதிகளிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கெனத் தொகுதி அமைப்பாளர்கள் இருந்தனர். அதேபோன்றதொரு நிலைமையை உருவாக்குவோம்.

அத்துடன், கட்சியின் அடுத்தகட்ட வேலைத்திட்டங்கள் சம்பந்தமாக விசேட ஊடகவியலாளர் மாநாடு நடத்தப்பட்டு, அதன் ஊடாக அறிவிக்கப்படும். - என்றார்.

# ஆட்சியைக் கைப்பற்றும் இலக்குடன் நாம் உறுதியுடன் பயணிக்கின்றோம்

## சஜித் அதிரடிக் கருத்து



நாம் ஆட்சி அதிகாரத்துக்கு வந்திருந்தால் நிச்சயம் அரசியல் தீர்வுக்கான நடவடிக்கையை முன்னெடுத்திருப்போம். துரதிஷ்டவசமாக நாம் இரண்டு பிரதான தேர்தல்களிலும் வெற்றியடைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் இலக்குடன் நாம் உறுதியுடன் பயணிக்கின்றோம்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் விழா எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்திலும் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. அந்த நிகழ்வில் சஜித் பிரேமதாஸ தனது மனைவி ஜலானியுடன் கலந்துகொண்டார். அதன்பின்னர் நாட்டின் தேசிய பிரச்சினை தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரின் கலாசாரத்தையும் பண்பாட்டையும் நாம் மதிக்கின்றோம். அவர்கள் கொண்டாடும் பண்டிகைகளை நாமும் இணைந்து கொண்டாடுகின்றோம். அதன் ஒரு நிகழ்வே இன்று நேற்று முன்தினம் எமது அலுவலகத்தில் கொண்டாடப்பட்ட தைப்பொங்கல் விழாவாகும்.

இந்த நாட்டில் தமிழர்கள், சிங்களவர்களுடன் இணைந்து வாழவே விரும்புகின்றார்கள். பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள்தான் அவர்கள் தீர்வு கேட்கின்றார்கள். நாட்டைப் பிரிப்பது அவர்களின் நோக்கம் அல்ல. இதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பல தடவைகள் நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்துள்ளார்.

சகல இன மக்களும் ஏற்கும் புதிய அரசமைப்பு இவ்வருடம் கொண்டுவரப்பட வேண்டும். இதனூடாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் உள்ளிட்ட தேசிய பிரச்சினைகள் அனைத்துக்கும் நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இந்த நிலைப்பாட்டில் நாம் உறுதியாக உள்ளோம். ஆனால், இனவாத சிந்தனையில் செயற்படும் ராஜபக்ஷ அரசு இதை நிறைவேற்றுமா என்பது கேள்விக்குறி.

நாம் ஆட்சி அதிகாரத்துக்கு வந்திருந்தால் நிச்சயம் அரசியல் தீர்வுக்கான நடவடிக்கையை முன்னெடுத்திருப்போம். துரதிஷ்டவசமாக நாம் இரண்டு பிரதான தேர்தல்களிலும் வெற்றியடைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் இலக்குடன் நாம் உறுதியுடன் பயணிக்கின்றோம் -என்றார்.

# சிறுபான்மையினர் மீதான அடக்குமுறைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினார் மைத்திரி



இலங்கையில் சிறுபான்மையின மக்கள் மீதான துன்புறுத்தல்கள் உடன் முடிவுக்கு வர வேண்டும். நினைவேந்தல் உரிமையை வேண்டுமென்றே தட்டிப் பறிப்பதும், இறந்த உடல்களை நல்லடக்கம் செய்வதற்கு அனுமதி மறுப்பதும் அடக்கு முறையின் உச்சக்கட்டத்தையே எடுத்துக்காட்டுகின்றது.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இறுதிப் போரில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அவர்களின் உறவுகள் நினைவாக யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் தூபி இடித்தழிக்கப்பட்டமை தொடர்பில்கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரில் இறந்த தமது குடும்பத்தினரை - உறவினர்களை நினைவுகூரத் தமிழ் மக்களுக்கும் உரிமை உண்டு. அதை எந்தச் சட்டங்கள் ஊடாகவும் தடுத்து நிறுத்த முடியாது.

நினைவுத் தூபிகளை உடைப்பதும் அழிப்பதும் இறந்த ஆன்மாக்களைக் கொச்சைப்படுத்தும் செயலாகும்.

இறந்த உடல்களை நல்லடக்கம் செய்வதற்கு முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். கொரோனாவால் உயிரிழந்த அனைவரையும் தகனம் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் எந்தச் சட்டத்திலும் இல்லை.

இலங்கையில் சிறுபான்மையின மக்கள் மீதான துன்புறுத்தல்கள் உடன் முடிவுக்கு வர வேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் அழுத்திக் கூற விரும்புகின்றேன் - என்றார்.

# தேசிய பாதுகாப்புக்கு சப்ரியால் அச்சுறுத்தல்

## சிங்கள அமைப்பு கடும் சீற்றம்; கண்டியில் நாளை ஆர்ப்பாட்டம்

சட்டத்தரணிகளைப் பிரதான பொலிஸ் அதிகாரிகளாக நியமிப்பதற்கு நீதி அமைச்சர் அலி சப்ரியால் அமைச் சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை புத்திஜீவிகள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்து, தேசிய பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு அலி சப்ரியை அமைச்சரவை அமைச்சுப் பதிவியிலிருந்து விலக்குமாறு வலியுறுத்தி நாளை ஞாயிற்றுக்கிழமை சிங்களே தேசிய கூட்டு ஒன்றியத்தால் கண்டியில் ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பால் இன்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசின் மிகவும் முக்கியத்துவ முடைய அமைச்சுப் பதவியை வகிக்கும் அலி சப்ரி, இனங்களுக்கிடையில் பேதங்கள் ஏற்படும் வகையில் தெரிவித்த கருத்து, 69 இலட்சம் மக்களால் ஆட்சியில் அமர்த்தப்பட்ட அரசின் அமைச் சரொருவரால் ஜனநாயகமுடைய சமூகத்தில் மக்கள் எதிர்பார்க்காததொரு விடயமாகும்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்பது நடை முறைப்படுத்தப்பட வேண்டும் என்று கூறப்படுவதை ஏற்றுக்கொள்கின்ற போதிலும், சட்டத்தரணிகளைப் பிரதான பொலிஸ் அதிகாரிகளாக நியமிப்பதற்கு அமைச்சரவையில் அவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரம் கற்ற மக்கள் சமூகத்தின் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, அலி சப்ரியை அமைச்சரவை அமைச்சுப் பதவியிலிருந்து விலக்குமாறு நாம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இதனை வலியுறுத்தி அமைதியான முறையில் கண்டி தலதா மாளிகை சுற்று வட்டாரத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் தொடர்பில் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடத்தின் மகா சங்கத்தினருக்கும் இதன்போது தெளிவுபடுத்தப்படும் - என்றுள்ளது.

# மட்டக்களப்பில் கொரோனாவால் ஒருவர் மரணம்!

மட்டக்களப்பு மாநகர சபை பொதுச் சந்தைக்கு அருகிலுள்ள பகுதியில் மாரடைப்பால் இறந்த 79 வயதுடைய வயோதிபர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று என இன்று கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்து அந்தப் பகுதி முடக்கப் பட்டு வீதிகள் யாவும் மூடப்பட்டுள்ளன என்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

# கொரோனாத் தாக்கத்திலிருந்து இதுவரை 44,746 பேர் மீண்டனர்!

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 487 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண் ணிக்கை 44 ஆயிரத்து 746 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 6 ஆயிரத்து 593 பேருக்குத் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வரு கின்றது. கொரோனாவால் 255 பேர் உயிரி ழந்துள்ளனர்.

இலங்கையில் 2020 மார்ச் முதல் இன்று வரை 51 ஆயிரத்து 594 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

## இரணைமடுக்குளத்தின்

# 101 ஆண்டு நிறைவு இன்று 101 பானைகளில் பொங்கல்



கிளிநொச்சி - இரணைமடுக்குளம் நீர்ப்பாசனத்துக்குத் திறந்துவிடப்பட்டு 101 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இன்று 101 பானைகளில் கனகாம்பிகை அம்மன் ஆலய முன்றலில் பொங்கல் நிகழ்வு நடத்தப்பட் டுள்ளது.

இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில்வருடந் தோறும் இந்த நிகழ்வு மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் இவ்வருடம் இர ணைமடுக் குளம் நீர்ப்பாசனத்துக்குத் திறந்து விடப்பட்டு 101 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இதனை முன்னிட்டு கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்து நடத்தியுள்ளது.

இதில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மாவட்ட நீர்ப்பாசன பிரதம எந்திரி இராஜகோபு, பிரதி விவசாயப் பணிப்பாளர் அற்புதச்சந்திரன், விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் மேலதிகப் பணிப்பாளர், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# பொருத்தமான அதிபர் ஒருவரை செங்குந்தாவுக்கு நியமியுங்கள்!

## பழைய மாணவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரிக்குத் தகுதிவாய்ந்த மிகப்பொருத்தமான அதிபரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்லூரியின் பழைய மாணவர்கள் பலர் ஒப்பமிட்டு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

எங்களுடைய யா/செங்குந்தா இந்துக் கல்லூரியானது எண்பத்தைந்து வருட கால வரலாற்றுச் சிறப்புமிக்க 1C தரப் பாடசாலையாகும். இருக்கின்றபோதும் கடந்த காலங்களில் சில வேண்டத்தகாத செயற்பாடுகளின்பால் ஈர்க்கப்பட்ட இப் பிரதேசத்தைச் சேர்ந்த தரம் I அல்லாத அதிபர்களின் பொருத்தமற்ற நிர்வாக நடவடிக்கைகளினால் காலத்திற்குக் காலம் கல்லூரியின் தனிச் சிறப்புக்கள், கல்வி, பண்பாடு, கலாச்சாரம், விளையாட்டு, பௌதிகவளம், நன்மதிப்பு போன்ற விழுமியங்கள் சீர் குலைந்தும் பின்னகர்ந்தும் போகின்றன. இதனால் அதிகரித்த முரண்பாடுகள் காரணமாக கல்லூரியானது இழிநிலைக்கு இட்டுச் செல்லப்படுகின்றது. இவ்வேளைகளில் ஒட்டுமொத்த கல்லூரிச் சமுதாயத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பொருத்தமான நடவடிக்கைகளின் பயனாக குறித்த அதிபர்கள் இடம்மாற்றப்படுகின்ற போதும் தொடர்ந்தும் பொருத்தமான அதிபர்கள் உரியவாறு நியமிக்கப்படாததால் மீண்டும் மீண்டும் கல்லூரியானது பெரிதும் பாதிப்புக்குள்ளாகி மீளெழுமுடியாத பாரிய இழிநிலைக்குத் தள்ளப்படுகின்றது.

அந்தவகையில் கடந்த 10.01.2021 ஆம் திகதி முதல் எமது கல்லூரியிலிருந்து மாற்றலாகிச் சென்ற அதிபருக்குப் பதிலாக கல்விநிருவாக சுற்றுநிருபங்களுக்கமைய உரிய சட்டப்பிரகாரம் பொருத்தமான கால அவகாசத்தில் மிகப்பொருத்தமான தகுதி வாய்ந்த இப்பிரதேசத்தை எவ்வகையிலும் சாராத தரம் I ஐச் சேர்ந்த அதிபர் ஒருவரை பகிரங்கமாக விண்ணப்பம் கோரி நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்து நியமிப்பதன் மூலம் எவ்வித பக்கச்சார்பற்ற சுயாதீனமான செயற்பாடுகளினால் மேம்பட்ட திசை நோக்கி எமது கல்லூரியினை மீளவும் நன்னிலைக்கு இட்டுச் செல்லும் வகையிலான சீரிய நிர்வாகத்திற்கு வழியமைத்துத் தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். - என்றுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

# கையூட்டு பெற முயற்சி; இரு பொலிஸார் கைது!



மாத்தறை மற்றும் எல்பிட்டி பகுதியில் கையூட்டு பெற்றுக்கொள்ள முயற்சித்தனர் எனக் கைது செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இருவருக்கும் எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அதற்கமைய, தொடர்ந்தும் இவ்வாறான மோசடி செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் பொலிஸ் உத்தியோகத் தர்கள் தொடர்பில் பொலிஸார் கவனம் செலுத்தி வருகின்றனர் எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

அதற்கமைய , மாத்தறை பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிளில் சென்றார் எனக் கூறப்படும் இளைஞனிடமிருந்து , 5,000 ஆயிரம் ரூபா பணத்தை கையூட்டாகப் பெற்றுக் கொள்ள முயற்சித்தார் என போக்குவரத்து பொலிஸ் பிரிவின் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அவருடன் இருந்த மற்றைய பொலிஸ் உத்தியோகஸ் தர்கள் இருவர் தொடர்பிலும் ஒழுங்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளன. சந்தேக நபரான கான்ஸ்டபிள் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, எல்பிட்டி பகுதியில் சிகரெட் உற்பத்தி நிலையமொன்றில் சிலர் கையூட்டு பெற்றுக்கொள்ள முயற்சித் துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கையூட்டுப் பெற்றுக் கொள்ள முயற்சித்தவர்களில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் உள்ளார் எனத் தெரியவந்தமையை அடுத்து, அந்த கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரான கான்ஸ்டபிள் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்படவும் உள்ளார். – என்று தெரிவித்துள்ளார்.

# ஈழத்துத் திருச்செந்தூரில் சிறப்பாக நடைபெற்றது

## பட்டிப் பொங்கல் விழா!





தமிழர்களின் தைப்பொங்கல் திருநாளை அடுத்து வரும் பட்டிப்பொங்கல் நாளான நேற்றுமுன்தினம் பசுக்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் சிறப்பு நிகழ்வுகள் நடை பெற்றுள்ளன.

ஈழத்துத் திருச்செந்தூர் எனப்போற்றப்படும் மட்டக்களப்பு கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் உள்ள மாட்டுப் பட்டியில் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) பட்டிப்பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது.

'குலங்காக்கும் பசுவை காப்போம்' என்னும் தொனிப்பொருளில் இந்தப் பட்டிப்பொங்கல் விழா சிறப்பாக நடத்தப்பட்டது. இதன்போது பசுக்களுக்கு சந்தனம், குங்குமம் அணிவிக்கப்பட்டு பக்தி பூர்வமாக பூசைகள் நடத்தப்பட்டன.

இயற்கையையும் தொழிலையும் மதித்து வணக்கும் தமிழர் திருநாளே தைப்பொங்கல் ஆகும். உழவுத் தொழிலில் உழவனுக்கு உறுதுணையாய் இருக்கும் எருதுகளுக்கு பொங்கல் இட்டு மரியாதை செய்யும் பட்டிப் பொங்கல் நாள் நேற்று முன்தினமாகும்.

தமிழர்களின் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் எடுத்துரைக்கும் தைத்திருநாள் இரண்டாம் நாள் நிகழ்வான பட்டிப்பொங்கல் காலம் காலமாக முக்கியத்துவம் பெறும் கால்நடைகளுக்கான பண்டிகை ஆகும்.

மக்களின் வாழ்வில் ஒன்றிய பசுவுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவும், பசுக்களில் எல்லாத் தேவர்களும் இருப்பதாலும் பசுக்களை வணங்கி வழிபடும் நாளாக பட்டிப்பொங்கல் திகழ்கின்றது.

தொழுவத்திலேயே பொங்கல் பொங்கி கற்பூர தீபாராதனை காட்டப்படும். இதன் பின்னர் பசு, காளை, எருமை என அனைத்து கால்நடைகளுக்கும் பொங்கல், பழம் கொடுக்கப்படும்.

உழைப்பில் உதவும் உயிரினத்துக்கு நன்றி செலுத்தவும் பசுச் செல்வங்களை நேசிக்கும் மரியாதை செய்யும் மனித மாண்பையும் பட்டிப்பொங்கல் வெளிப்படுத்துகின்றது.

# திருமணமண்டபங்கள், சந்தைகள் திறப்பதற்கு வடக்கில் அனுமதி!

## மாகாண சுகாதார பணிப்பாளர் தகவல்

வடக்கு மாகாணத்திலுள்ள திருமண மண்டபங்கள் மற்றும் பொதுச்சந்தைகள் ஆகியவற்றை நாளைதிங்கட்கிழமையில் இருந்து திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் பரம்பல் காரணமாக பொதுச்சந்தைகள் மற்றும் திருமண மண்டபங்கள் அனைத்தும் சுகாதார பிரிவினரால் மூடப்பட்டிருந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் இடம்பெற்ற கொரோனா தடுப்பு வழிகாட்டல் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

வவுனியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களிலும் உள்ள திருமண மண்டபங்களில் 150 பேருடன் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி திருமண மண்டபங்களை திறப்பதற்கு அனுமதி அளிப்பதாக ஆ.கேதீஸ்வரன் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் பொதுச்சந்தைகளையும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றித் திறப்பதற்கு அனுமதி அளிப்பதாகவும் இந்த விடயம் தொடர்பான அறிவுறுத்தல்கள், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் மாகாண பிரதம செயலாளர், அரச அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# ரஞ்சனின் பிரஜா உரிமை ரத்தாகும் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர்

நான்கு வருடகால கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் பிரஜா உரிமை 7 வருடங்களுக்கு இல்லாமல்போகும் என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்தார்.

உயர் நீதிமன்றத்தால் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மற்றும் அவரது பிரஜா உரிமை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

நான்கு வருடங்களுக்குக் கடூழிய சிறைத்தண்டனைக்கு ஆளாகி இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ் சன் ராமநாயக்க குற்றவியல் குற்றத்துக்கு ஆளாகியமையின் மூலம் அவரது சிறைத் தண்டனை 6 மாதங்கள் முடிவடைந்த பின்னர், அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி ரத்தாகிவிடும். 6 மாதங்களுக்குள் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்தால், அவரது நாடாளுமன்ற ஆசனம் வெறுமையாகும்.

அவரது நாடாளுமன்ற இடத்துக்கு பொதுத் தேர்தலில் அடுத்த படியாக அதிகவிருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்ட வேட்பாளரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பெயரிடுவோம்.

அத்துடன் ரஞ்சன் ராமநாயக்க அவருக்கு விதிக்கப்பட்டிருக்கும் சிறைத்தண்டனையில் 6 மாத காலம் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாமல் போவதுடன் அவரது பிரஜா உரிமையும் இல்லாமல் போகின்றது.

அதாவது, அவருக்கு விதிக்கப்பட்டிருக்கும் தண்டனை காலம் முடிவடைந்து ,அவர் விடுதலையாகும் தினத்தில் இருந்து 7 வருட காலங்களுக்கு அவரது பிரஜா உரிமை இல்லாமலாகும். அதன் பிரகாரம் எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதிக்கு பின்னர் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாமல் போகும். – என்றார்.

# திருமலையின் பூம்புகார் பிரதேசம் முடக்கப்பட்டது!

திருகோணமலை, உப்பு வெளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாலையூற்று, பூம்புகார் கிழக்கு பிரதேசம் நேற்று (சனிக் கிழமை) முதல் முடக்கப்பட்டுள்ளது.

பூம்புகார் கிழக்கு பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மட்டும் 13 புதிய கொவிட் - 19 தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டமையை அடுத்து அந்தப் பிரதேசம் முடக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து பூம்புகார் கிழக்கு பிரதேசத்துக்கு உள் நுழையும் மூன்று வீதிகளில் தடைகள் ஏற்படுத்தப்பட்டு பொலிஸார் மற்றும் இராணுவ வீரர்கள் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று தினங்களில் பூம்புகார் கிழக்கு பிரதேசத்தில் 20 கொவிட் - 19 தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டமையை அடுத்து குறித்த பிரதேசம் முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொவிட் சடலங்களில் இருக்கும் வைரஸ்கள் உயிரற்றவை ஆகும்!

## வைரஸ் விசேட நிபுணருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண எம்.பி. கருத்து

கொழும்பு, ஜன.17

கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணித்தவர்களின் சடலங்களை பல வாரங்கள் அதி குளிர்சாதனங்களில் வைத்திருந்த நிலையில் அவற்றில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டு பார்க்கும்போது வைரஸ் தொற்று இருப்பதாகவே காண்பிக்கும்.

என்றாலும் அவை உயிருள்ள நிலையில் இருக்கா என நாடாளுமன்ற உறுப்பினரும் வைரஸ் தொடர்பான விசேட நிபுணருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

கொவிட் தொற்றுக்குள்ளாகி மரணித்தவர்களின் சடலங்கள் அதி குளிர்சாதனங்களில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சில வாரங்கள் சென்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டாலும் வைரஸ் இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் அதனால் அடக்கம் செய்வது அச்சுறுத்தலான விடயம் எனவும் ஒருசிலரால் தெரிவிக்கப்படும் கருத்து தொடர்பில் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

அதிகுளிர்சாதனங்களில் பல வாரங்கள் இருக்கும் கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணித்தவர்களின் சடலங்களில் இருந்து பெறப்படும் மாதிரிகளை பரிசோதித்து பார்க்கும்போது, அதில் கொரோனா வைரஸ் இருக்கலாம். என்றாலும் அவை உயிருள்ளவையாக இருக்கா. அதனால் மரணித்தவர்களின் சடலங்களில் இருந்து வைரஸ் பரவுவதற்கு வாய்ப்பில்லை.

அத்துடன் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய நபரிடமிருந்து, ஆரோக்கியமான ஒருவருக்கு வைரஸ் பரவுவதாக இருந்தால், உயிருள்ள வைரஸ் குறிப்பிடத்தக்களவு பரிமாறிக்கொள்ளவேண்டும். அவ்வாறு இல்லாமல் நோய் தொற்று ஏற்படுவது குறைவாகும்.

மேலும் கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணிப்பவரின் சடலத்தில் உயிருள்ள வைரஸ் பல மணிநேரங்கள் இருக்கலாம். என்றாலும் அந்த சடலங்களை அடக்கம் செய்த பின்னர், நீருடன் கலந்து வைரஸ் பரவுவதாக விஞ்ஞான ரீதியில் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. அதனால் சடலங்களில் இருக்கும் வைரஸ் தொடர்பாக தேவையற்ற பீதியை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. - என்றார்.

---

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## 11.01.2020 தொடக்கம் 15.01.2021 வரையிலான சந்தையில் முக்கிய பயிர்களின் விலை நிலவரம் ஒரேபார்வையில்...

### தம்புள்ள, pettah, narahenpita சந்தையின் விலை நிலவரம்

11.01.2020 தொடக்கம் 15.01.2021 வரையான காலப்பகுதியில் பெற்றா தம்புள்ள மற்றும் நாரஹன்பிடா சந்தைகளில் தேசி, உள்ளூர் சிவப்பு வெங்காயம், பெரிய வெங்காயம், தேங்காய், கோவா, தக்காளி, போஞ்சி, கரட், கத்தரி, பூசணி, பச்சை மிளகாய் போன்ற பயிர்களின் விலைகளில் தளம்பல்நிலை அவதானிக்கப்பட்டது இதனால் இவை முக்கிய கவனத்துக்குரிய பயிர்களாக இருந்தன.

1. நுவரெலியா, மந்தரம்நுவரா, கப்பெடிபோலா, மாடலே மற்றும் புத்தளம் மற்றும் கலேவெலா பகுதிகளிலிருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நாரஹன்பிடா சந்தைகளில் போஞ்சி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.
2. ராகலா, கண்டபோலா, நுவரெலியா, கந்தபோலா மற்றும் புசல்லாவ மற்றும் பண்டாரவெலவிலிருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக தம்புள்ள சந்தைகளில் கரட்டின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.
3. விலாச்சியா, அனுராதபுரா, புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் இருந்து குறைந்த வழங்கல் காரணமாக அல்லது சாதகமான வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நாரஹன்பிடா சந்தைகளில் பச்சை மிளகாயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.
4. மொனராகல மற்றும் பிபில் பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள சந்தையில் தேசி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.
5. மொனராகல, கலென்பிந்து நுவேவா மற்றும் மகியங்கன மற்றும் லகலா பகுதியில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் பூசணிக்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.
6. யாழ்ப்பாணத்திலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாகவும் இறக்குமதி செய்யப்பட்ட வகைகள் கிடைக்காமையாலும் தம்புள்ள சந்தையில் உள்ளூர் சிவப்பு வெங்காயத்தின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.
7. பல்லேபோலா பகுதிகளிலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் கத்தரி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.
8. குருநாகல் மற்றும் குலியபிட்டி பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் தேங்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.
9. புத்தளம் பகுதிகளிலிருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நாரஹன்பிடா சந்தைகளில் கோவா விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.
10. நுவரெலியா, பலங்கொட மற்றும் நாவலப்பிட்டிய பகுதிகளில் இருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நாரஹன்பிடா சந்தைகளில் தக்காளியின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.
11. நெதர்லாந்து மற்றும் பாகிஸ்தானில் இருந்து குறைந்த மற்றும் உயர்தர வகை பெரிய வெங்காயம் கிடைப்பதால் இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

### pettah சந்தை மொத்த விலைகள்

| | 11.01.2021 | 12.01.2021 | 13.01.2021 | 14.01.2021 | 15.01.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 120 | 125 | 130 | | 120 |
| கேரட் | 120 | 115 | 110 | | 120 |
| கோவா | 40 | 38 | 35 | | 40 |
| தக்காளி | [illegible] | 93 | 88 | | 103 |
| கத்திரிக்காய் | 90 | 95 | 130 | | 100 |
| பூசணி | 12 | 123 | 125 | | 130 |
| புடலங்காய் | 105 | 108 | 130 | | 103 |
| பச்சை மிளகாய் | 400 | 463 | 500 | | 543 |
| தேசி | 118 | 135 | 140 | | 150 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 390 | 390 | 375 | | 350 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 350 | 400 | 350 | | 400 |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | - | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 84 | 83 | 90 | | 100 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 160 | 155 | 145 | | 160 |
| உருளைக்கிழங்கு (இறக்குமதி) | 105 | 110 | 125 | | 105 |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | 400 | 90 | 500 | | 480 |
| தேங்காய் (சராசரி) | 80 | 85 | 85 | | 85 |

### தம்புள்ள சந்தை மொத்த விலைகள்

| | 11.01.2021 | 12.01.2021 | 13.01.2021 | 14.01.2021 | 15.01.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 85 | 105 | 95 | | 125 |
| கேரட் | 175 | 125 | 68 | | 105 |
| கோவா | 21 | 23 | 14 | | 28 |
| தக்காளி | 90 | 95 | 85 | | 105 |
| கத்திரிக்காய் | 80 | 135 | 115 | | 125 |
| பூசணி | 125 | 138 | 145 | | 135 |
| புடலங்காய் | 105 | 115 | 95 | | 125 |
| பச்சை மிளகாய் | 395 | 355 | 445 | | 510 |
| தேசி | 110 | 125 | 145 | | 125 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 335 | | 348 | | 400 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | - | 448 | 378 | | |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | - | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 80 | 88 | 95 | | 90 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | - | | | | |
| உருளைக்கிழங்கு (இறக்குமதி) | - | | | | |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | - | | | | |
| தேங்காய் (சராசரி) | 79 | 75 | 89 | | 79 |

### தம்புள்ள சந்தை சில்லறை விலைகள்

| | 11.01.2021 | 12.01.2021 | 13.01.2021 | 14.01.2021 | 15.01.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 105 | 125 | 115 | | 145 |
| கேரட் | 135 | 145 | 88 | | 125 |
| கோவா | 41 | 43 | 34 | | 48 |
| தக்காளி | 115 | 115 | 105 | | 125 |
| கத்திரிக்காய் | 108 | 155 | 135 | | 145 |
| பூசணி | 118 | 158 | 165 | | 155 |
| புடலங்காய் | 115 | 155 | 115 | | 145 |
| பச்சை மிளகாய் | 415 | 375 | 465 | | 530 |
| தேசி | 110 | 145 | 165 | | 145 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 335 | | 358 | | 410 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | | 458 | 388 | | |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 98 | 98 | 105 | | 100 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | | 141 | | | |
| உருளைக்கிழங்கு (இறக்குமதி) | | | | | |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | | | | | 525 |
| தேங்காய் (சராசரி) | 80 | 83 | 94 | | 84 |

### தம்புள்ள சந்தை பழங்கள் மொத்த விலைகள்

| பழங்கள் | 11.01.2021 | 12.01.2021 | 13.01.2021 | 14.01.2021 | 15.01.2021 |
|---|---|---|---|---|---|
| வாழைப்பழம் (புளிப்பு) | 55 | 55 | 45 | | 38 |
| பப்பாசி | 50 | 50 | 38 | | 25 |
| அன்னாசி | 95 | 95 | 83 | | 78 |
| ஆப்பிள் (இறக்குமதி) | | | 50 | | |
| ஆரஞ்சு (இறக்குமதி) | | | 68 | | |

### தம்புள்ள சந்தை பழங்கள் சில்லறை விலைகள்

| பழங்கள் | 11.01.2021 | 12.01.2021 | 13.01.2021 | 14.01.2021 | 15.01.2021 |
|---|---|---|---|---|---|
| வாழைப்பழம் (புளிப்பு) | 68 | 58 | 65 | | 58 |
| பப்பாசி | 63 | 43 | 58 | | 45 |
| அன்னாசி | 103 | 103 | 103 | | 98 |

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# திங்கள் முதல் ரயில் சேவைகள் ஆரம்பம் ஆசன முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்

## யாழ். பிரதான ரயில் நிலைய அதிபர் அறிவிப்பு

எதிர்வரும் 18ஆம் திகதி ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதால் நாளை முதல் ஆசன முற்பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று யாழ். பிரதான ரயில் நிலைய அதிபர் ரி.பிரதீபன் அறிவித்துள்ளார்.

ரயில் சேவைகள் ஆரம்பமாகவுள்ளமை குறித்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே ரி.பிரதீபன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த ரயில் சேவைகள் நாளை 18 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் இருந்து இரண்டு ரயில்கள் புறப்பட இருக்கின்றன. முதலாவதாக காங்கேசன் துறையில் இருந்து காலை 5.30 மணிக்குப் புறப்பட்டு, யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 6.10 மணிக்குப் புறப்படுகின்ற உத்தரதேவி கடுகதி ரயிலும், காங்கேசன் துறையில் இருந்து காலை 9 மணிக்குப்புறப்பட்டு, யாழ்ப்பாணத்தில் இருந்து 9.45 மணிக்குப் புறப்படுகின்ற யாழ். தேவி ரயிலும் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

அவ்வாறே கல்கிஸையில் இருந்து காலை 5.55 மணிக்குப் புறப்பட்டு கொழும்பிலிருந்து 6.35 மணிக்குப் புறப்படுகின்ற யாழ். தேவி ரயிலும், கொழும்பிலிருந்து முற்பகல் 11.50 மணிக்குப் புறப்படுகின்ற உத்தரதேவி ரயிலிலும் எதிர்வரும் 18 ஆம் திகதி சேவையை ஆரம்பிக்க இருக்கின்றன.

ஏனைய ரயில் சேவைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் முக்கியமாக கொழும்பிலிருந்து புறப்படும் குளிரூட்டப்பட்ட ரயிலும், இரவு தபால் ரயில் உட்பட அனைத்து ரயில் சேவைகளும் படிப்படியாக ஆரம்பமாக இருக்கின்றன.

நாளை 17ஆம் திகதி தொடக்கம் காலையில்இருந்துஉங்களுக்குத்தேவையான ஆசனங்களை யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் முற்பதிவு செய்து கொள்ள முடியும்.

அத்தோடு உங்களுக்குத் தேவையான ஏதாவது விபரங்களுக்கு 021 2222271 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பை மேற்கொண்டு அறிந்துகொள்ள முடியும்.

பயணிகள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ரயில் பயணத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

# நாடாளுமன்றம் பூட்டப்படுமா? இதுவரை தீர்மானம் இல்லை

## சபாநாயகர் அறிவிப்பு

நாடாளுமன்றத்தை மூடுவதற்கு எந்தத் தீர்மானமும் இதுவரை எடுக்க வில்லை என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

காலி - வெளிகம பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட சபாநாயகர், அங்கு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

கொரோனா ஆபத்தால் இரண்டு வாரங்களுக்கு நாடாளுமன்றத்தை மூடு மாறு கோரிக்கை எழுந்துள்ள நிலையில் சபாநாயகர் அந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளார்.

# சுகாதார நடைமுறை தளர்வுகளை துஷ்பிரயோகம் செய்ய வேண்டாம்!

## யாழ். அரச அதிபர் மக்களுக்கு அறிவுறுத்தல்!

சுகாதார நடைமுறைத் தளர்வுகளை பொதுமக்கள் துஷ்பிரயோகம் செய் யாது தங்களையும் சமூகத்தையும் பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டியது அவசியம் என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் தற்போதைய கொரோனா நிலைமைகள் தொடர்பில் கருத்துரைக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் தற்போதைய நிலை யில் 183 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலை காணப்படு கின்றது. கடந்த ஒக்டோபர் மாதத்தின் பின் தொற்று நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை யாழில் தொற்றுக்குள்ளான 126நபர்கள் பூரணமாக சுகமடைந்து வீடு திரும்பியிருக்கிறார்கள். தற்போதைய நிலையில் 1,415 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 598 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றநிவாரணப்பொதிகள்கட்டங்கட்டமாகத் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த இரண்டு, மூன்று நாள்களாக யாழ் மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை தொடர்ச்சியாக குறைவடைந்து செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இருந்த போதிலும் அந்த நிலைமையை நாங்கள் விழிப்பாக இருந்து கடந்து செல்லவேண்டிய நிலை காணப்படுகின்றது. எனவே பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களைப் பேணி, முகக் கவசம் அணிந்து, தங்களுடைய வழமையான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் நமக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலைமையிலிருந்து பாதுகாப்பாக கடந்து செல்ல முடியும்.

இந்த நிலையில் கொரோனா தொற்றினை தடுப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் சற்று யாழ் மாவட்டத்தில் தளர்த்தப்பட்டுள்ளன. பாடசாலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல் எதிர்வரும் காலங்களில் தனியார் கல்வி நிலையங்களை ஆரம்பிப்பதற்குரிய அறிவுறுத்தல்கள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிலையில் சினிமா திரையரங்குகள் மற்றும்வழிபாட்டு இடங்கள் போன்றவற்றில் சிலதளர்வுகள் அறிவிக்கப் பட்டுள்ளன அதாவது சில கட்டுப்பாடுகளுடன். சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டும் உள்ளன.

இதனைவிட கடந்த வாரம் தொடக்கம் மீன் சந்தைகள், அதேபோல் மூடப்பட்டிருந்த கடைகளினை மீள திறப்பதற்குரிய அனுமதி சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தமது செயற்பாடு களை செயற்படுத்தவேண்டும். அதே போல் நேற்றைய தினம் இடம்பெற்ற சுகாதார வழிகாட்டல் குழுவின் சிபார்சின் படி எதிர்வரும் திங்கட் கிழமை முதல் யாழ்ப்பாண மாவட்டத்தில் திருமண மண்டபங்கள், வரவேற்பு மண்டபங்கள் மற்றும் ஹோட்டல் மண்டபங்களை திறப்பதற்குரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியானது அந்த மண்டபத்தினுடைய கொள்ளளவில் 50 வீதத்திற்கு சமூக இடைவெளி பேணப்பட்டு அதேபோல் அனுமதிக்கப்பட கூடிய ஆள்களின் எண்ணிக்கை 150 எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் அங்கு சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றி நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதே போல உணவு பரிமாறும்போது சுயமாக பரிமாறிக் கொள்வது நிறுத்தப்பட்டுள்ளது. குறித்த விடயம் தொடர்பான வழிகாட்டல்கள் சுகாதார பிரிவினரால் அந்தந்தத் தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனைவிட எதிர்வரும் 18ஆம் திகதி மூடப்பட்டிருந்த சந்தைகளை மீளத் திறக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே அந்தந்த சந்தைகளுக்கு பொறுப்பான உள்ளூராட்சி மன்றங்கள் அதற்குரிய சுகாதார வழிகாட்டலை சரியாகப் பின்பற்றி சந்தைகளை திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது

எனவே தளர்வுகளை பொதுமக்கள் துஷ்பிரயோகம் செய்யாது சுயகட்டுப்பாட்டோடு தங்களையும் சமூகத்தையும் பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டியது கட்டாயமாக இருக்கின்றது.

மக்களுடைய சிரமங்களை குறைப்பதற்கும் அதே போல அவர்களுடைய வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்குமாகவே இந்த தளர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே பொதுமக்கள் எந்தவிதமான அலட்சியப் போக்கையும் காட்டாது அனைவரும் ஒரு சமூகப் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டியது அனைவரதும் கடப்பாடாகும்.

இந்த தளர்வுகள் யாவற்றையும் வேண்டத் தகாத விளைவுகளை ஏற்படுத்தாத வண்ணம் பயன்படுத்த வேண்டும். அத்தோடு தற்பொழுது சுகாதாரத் திணைக்களத்தினரால் மாகாணங்களுக்கு இடையில் பயணம் செய்வோர் தனிமைப்படுத்தப்படத் தேவையில்லை என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்தோடு அவ்வாறு செய்வதாயினும் தங்களுடைய அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தினை பொறுத்தவரை சுகாதாரப் பிரிவினர் மற்றும் ஏனைய பிரிவினரின் ஒத்துழைப்புடன் கொரோனா நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றோம். எனினும் இந்த நடைமுறையானது பொதுமக்களின் சிரமத்தை குறைப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார பிரிவினர் தனிமைப்படுத்தல் தொடர்பாக வெளி மாவட்டங்களிலிருந்து வருவோர் தொடர்பில் தகவல்களைச் சேகரித்து அவர்களுக்குரிய வழிகாட்டல்களை வழங்குவார்கள். அத்தோடு அவர்களைத் தனிமைப்படுத்துவதாயின் அதனை சுகாதார அமைச்சுக்கு தெரியப்படுத்தி அவர்களின் அனுமதியுடன் தனிமைப்படுத்துவார்கள்.

மாவட்டங்களுக்கிடையில் பயணம் செய்வோரை சிரமத்துக்குள்ளாக்காதவாறு இந்த நடைமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தக் கட்டுப்பாடு முழுமையாக தளர்த்தப்பட்டதாக ஏற்றுக் கொள்ள முடியாது.

வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பது தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் வழிகாட்டுவார்கள். எனவே மக்களை சிரமத்திற்குள்ளாகி விடக் கூடாது என்பதற்காக தளர்த்தப்பட்டுள்ள இந்த நடைமுறையானது முழுமையாகத் தளர்த்தப்பட்டதாகக் கருதப்பட முடியாது. எனினும் அந்தந்த பகுதி சுகாதார பிரிவினரால் அதற்குரிய வழிகாட்டல்கள் பின்பற்றப்படும்.

எனவே வெளிமாவட்டங்களில் பயணங்களை மேற்கொள்வோர் தமது பயணவிவரங்களை சுகாதாரப் பிரிவினருக்கு வழங்குவதன் மூலமே அதற்குரிய நடவடிக்கையினை முன்னெடுக்க முடியும். - எனவும் தெரிவித்தார்.











# வாழ்க்கை

## உங்கள் மனதில் இருக்கும் கவலையை மறக்க என்ன செய்ய வேண்டும்?

தொகுப்பு - ப்ரியமதா பயஸ்

ஒருவன் வாழ்க்கையில் மிகுந்த கவலையில் இருந்தான். தினமும் ஆண்டவனிடம் ஏன் எனக்கு இவ்வளவு பிரச்சனைகளை கொடுக்கிறாய், சிறிது கருணை காட்ட கூடாதா என மன்றாடினான்.

பல நாள்கள் இப்படி கழிய, ஒரு நாள், ஒரு குரல் கேட்டது. "நாளை காலை உன் கவலைகளை எல்லாவற்றையும் ஒரு மூடை கட்டி கோவில் முன்னே இருக்கும் மைதானத்திற்கு கொண்டுவா, உனக்கு ஒரு விடை அளிக்கிறேன்" - என்று.

அவனும் அனைத்து கவலைகளையும் ஒரு பெரிய மூடையாகக் கட்டி மறு நாள் காலை கொண்டு போனான். போகும் வழியில் பார்த்தால், கிராமத்தில் எல்லோரும் தம் தம் மூடைகளை, எல்லாம் பெரிய பெரிய மூடைகள் எனத்தூக்கிகொண்டுபோய்கொண்டிருந்தார்கள்.

சிலர் தூக்க முடியாமல் இழுத்து கொண்டிருந்தார்கள், சிலர் தம் மூடைகளை வண்டியில் கொண்டு வந்தார்கள். ஒவ்வொருவரிடமும் கேட்ட போது, "கடவுள் என் கவலைகளுக்கு விடை தருகிறேன் என்று சொன்னார். அது தான் போய் கொண்டு இருக்கிறேன்" என்றார்கள்.

எல்லோரும் கோவில் முன்னே சேர்ந்ததும், மீண்டும் அதே குரல் "நீங்கள் உங்கள் மூடையை உங்கள் விருப்பப்படி வேறொருவரிடம் மாற்றி கொள்ளலாம். ஆனால் மூடை உள்ளே என்ன இருக்கிறது என்று கேட்கவோ பார்க்கவோ கூடாது" - என்று கேட்டது.

சிலர் தம் மூடையை வேறொருவரிடம் மாற்ற முயன்றார்கள். இப்பொழுது தம் தம் மூடை மற்றவர்களுடைய மூட்டையை விட சிறியதாக தோன்றியது.

மாற்றத் தயங்கினர். கடைசியில் பார்த்தால், எல்லோரும் தம் தம் மூடைகளை கெட்டியாக பிடித்து கொண்டார்கள். தம் மூடைகளையே திரும்ப எடுத்து கொண்டு வீடு திரும்பினார்கள்.

யாருக்குமே கவலை இல்லை என்று சொல்ல முடியாது. அவரவர்க்கு தம் தம் கவலைகள் பெரியது. நாம் நம் பணப் பிரச்சினையைக் கொடுத்து விட்டு, மற்றவரிடம் உள்ள சர்க்கரை நோயை வாங்கி மாற்றி கொள்ள முடியுமா?

சரி, கவலை என்பது என்ன என்று பார்ப்



போம். நம் மனதின் எண்ணங்கள் ஒரு குறிப்பிட்ட வியத்தை பற்றி அதிகமான சிந்தித்தல் தான் கவலை.

இந்த வியம் கடந்த காலத்தில் நடந்த சம்பவமாக இருக்கலாம் அல்லது வருங்காலத்தில் நிகழக்கூடிய விடயமாக இருக்கலாம். எப்பொழுதும் அதன் விளைவுகளை பற்றியே யோசித்து மனதின் எண்ணங்களை அதிகபடுத்தி கொள்கிறோம். அதை தவிர்த்து, அதை எப்படி அணுகுவது என்று யோசித்தால் தீர்வு கிடைக்கும்.

## இந்த பத்து விடயங்களை ஒருபோதும் செய்துவிடாதீர்கள்!



1. தனது உடல் ஆரோக்கியத்திற்கு கேடு ஏற்படுத்தும் எந்தவித பழக்கம் மற்றும் செயலில் ஈடுபடுவது.

2. தோல்வியை தழுவுபவர்களை நண்பர்கள்/ மற்றவர்கள் - கேலியும் கிண்டலும் செய்வது; இழிவாக பேசுவது.

3.நமக்கு ஏற்படும் பிரச்சினையை எதிர்கொள்ள பயந்து போய் அதிலிருந்து தப்பித்து வேறு எதிலோ மனதை செலுத்தி கொண்டு இருப்பது.

4.நாம் முன்பு செய்த தவறுகளில் கிடைத்த வாழ்க்கைப் பாடத்தை சரியாகப் புரிந்து கொள்ளாமல் செய்த தவறை மீண்டும் மீண்டும் செய்வது.

5. ஏதோ ஒரு பிரச்சினை காரணமாக நமது மனதில் ஏற்பட்டுள்ள புழுக்கத்தை - துன்பத்தை - யாரிடமும் பகிர்ந்து கொள்ளாமல் இருப்பது.

6. நாம் அச்சப்படும் வியங்களின் / நபர்களின் உண்மைத்தன்மை என்ன என்று புரிந்து கொள்ளாதது.அதற்கு முயற்சி செய்யாதது.

7. நம்மால் ஒன்றும் செய்ய முடியாத வியங்களை/பிரச்சுனைகளை பற்றி நினைப்பது/ கவலைப்படுவது.

8. வெற்றி என்பதை உயர்வாகவும் தோல்வி என்பது அஞ்சத்தக்கது என்றும் கருதுவது.

9. நம்பிக்கை கொள்ள வேண்டிய நபர்கள் மீது தொடர்ந்து சந்தேக கண்கள் கொண்டு பார்ப்பது - நம்பாமல் இருப்பது.

10. நம்பிக்கைத் துரோகம் செய்வது.

## இந்த 10 வியங்களை மறந்துவிடாதீர்கள்!



1 .நன்றி மறத்தல் (காரியம் முடிந்ததும் காரணகர்த்தாவை பழிப்பது)
2.ஓர வஞ்சகம் செய்தல் (சமநிலை தவறல்).
3.துரோகம் செய்தல் (நம்பியவரை கைவிடல்).
4.வாழ்க்கை விளிம்பிலுள்ள பெற்றோறை கைவிடுவது
(பொருளாதார அடிப்படையிலும் மனதளவிலும்).
5.ஒழுக்கம் தவறுவது.
6.தீமை தரும் பொய் பேசுவது
(பொய்மையும் வாய்மை இடத்து தீமையிலா சொல்).
7.வாழ்வில் முன்னேற சதி செய்வது (அபகரிதல், திருடுதல்.
8.லஞ்சம் கொடுப்பது (காரியம் ஆக குறுக்கு வழி தேடுவது).
9.பொதுநலன் காக்க தவறுவது
(பாதையில் கிடக்கும் முள்ளை ஆகற்றாமல் இருப்பது போல)
10. தெரியாமல் செய்த தவறை மீண்டும் தெரித்தே செய்வது.

## ஒருவரின் வாழ்க்கையை அழிக்கக்கூடிய பழக்கவழங்கள்

உடல் ரீதியான பழக்கங்கள் எல்லோருக்கும் தெரிந்ததே. புகை, மது, போதைப்பொருள், ஜாதி வெறி, தீண்டாமை (இன்றும் பல ஊர்களில், குறிப்பாக கிராமங்களில் உள்ளது) மற்றும் சில.

'மன ரீதியான' என்றால் தெரிந்தே ஒருவரை ஏமாற்றுதல். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே இதில் அடங்குவார்கள் .

பொறாமை என்பது அடுத்த முக்கியமானது. தன்னை விட ஒருவர் பொருளாதார ரீதியாக உயர்ந்து விட் டால், அதுவும் இளம் வயதில் (20 - 25) மிகவும் கஷ்டப்பட்டவர் 40வயதில் நல்ல நிலைக்கு வந்து விட்டால் பொறாமை தான் முதலில் வரும்.

40 - 50 வயதில் மிகவும் வசதி படைத்தோர், உடன் பிறந்தோர் மற்றும் உறவினர்களை ஒதுக்குதல் இன்னொரு காரணம். இதற்கு காரணம் பண உதவி கேட்டு யாராவது வந்து விடுவார்களோ என்ற பயம் தான்.

இந்த மூன்று குணங்களும் ஒரு மனிதனை நின்று கொல்லும். காலப்போக்கில் இது உறவுகளே இல்லாமல் இயந்திர வாழ்க்கையாகி விடும்.

வாழ்வின் இறுதிக்காலம் பணமிருந்தும்



# அன்னை மரியா நம்மை எப்போதுமே கவனித்து வருகின்றார் இந்த எண்ணத்தில் நாம் நம் பயணத்தைத் தொடக்குகிறோம்



அன்னை மரியா நம்மை எப்போதும் கவனித்துவருகிறார் என்ற எண்ணத்தில் நாம் நம் பயணத்தைத் துவக்குகிறோம்.

இறைவனின் தாயாக இன்று நாம் கொண்டாடும் மிகவும் புனிதம் நிறைந்த மரியாவின் தாய்மையும் பரிவும் நிறைந்த பார்வைக்குக் கீழ் நம்மையே ஒப்படைத்து இந்த ஆண்டை துவக்குகிறோம் என்ற சொற்களுடன் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 01 ஜனவரி 2021 வழங்கிய மூவேளை செப உரையைத் தொடக்கினார்.

வரலாற்றுப் பாதையில் நாம் சந்திக்கும் பிரச்சினைகள் நமக்கு கவலைகளை உருவாக்கினாலும் அன்னை மரியா நம்மை எப்போதும் கவனித்துவருகிறார் என்ற எண்ணத்தில் நாம் நம் பயணத்தைத் தொடக்குகிறோம்.

அந்த அன்னை நம்மீது காட்டும் பரிவும் அக்கறையும் நம்மிடையே ஒரு கலாசாரமாக உருவாகவேண்டும் என்பதும், அதுவே உலக அமைதியை உறுதிப்படுத்தும் என்பதும் நாம் இவ்வாண்டு சிறப்பிக்கும் உலக அமைதி நாளின் மையக் கருத்தாகும்.

நாம் வாழும் இன்றையச் சூழலில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இடத்திலும் அமைதியை உருவாக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். ஆறுதல் தேவைப்படுவோரின் கரங்களை நாம் பற்றிக்கொண்டு அவர்களுக்கு நம் சொல்லாலும் செயலாலும் ஆறுதல் வழங்க வேண்டும்.

சுயநலத்தாலும் வேறு பல தீமைகளாலும் ஆபத்தைச் சந்தித்துவரும் உலக அமைதியை பாதுகாக்க நாம் பகிர்வை இவ்வுலகில் அதிகம் வளர்க்கவேண்டும்.

அமைதியின் இளவரசரான (எசாயா 9:6) இயேசுவைப் பெற்றெடுத்த கன்னி மரியா விண்ணுலகிலிருந்து நம் அனைவருக்கும் இந்த அமைதி என்ற கொடையை பெற்றுத்தருவாராக. மனிதர்களின் முயற்சியைக் கொண்டு மட்டும் உருவாக்க முடியாத இந்த அமைதிக்காக நாம் தொடர்ந்து இறைவேண்டல் செய்யவும் பொறுமையுடன் உரையாடல்களை மேற்கொள்ளவும் முயல்வோம் என்ற சொற்களுடன் தன் உரையை நிறைவு செய்தார்.

பின் மூவேளை செபத்தைக் கூறி அனைவருக்கும் ஆசீரளித்தார்.

# எந்த நாளையும் சமாதானமின்றி முடிவுக்குக் கொண்டு வராதீர்கள்!

## எடுத்துரைக்கிறார் திருத்தந்தை

குடும்பங்களில் அமைதியும் மகிழ்வும் நீடித்து நிலைக்க உதவும் மூன்று வார்த்தைகளின் அவசியம் குறித்து திருக்குடும்ப திருவிழா நண்பகல் மூவேளை செப உரையின்போது எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். ஒவ்வொரு குடும்பத்திலும் பிரச்சினைகள் உள்ளன. அவற்றைத் தொடர்ந்து சண்டை சச்சரவுகளும் இருக்கலாம்.

ஆனால் எந்த ஒரு நாளையும் சமாதானமின்றி முடிவுக்குக் கொண்டு வராதீர்கள் என உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன் என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 'தயவுகூர்ந்து' – 'நன்றி' – 'மனம் வருந்துகிறேன்' என்ற மூன்று சொற்களின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

இந்த மூன்று சொற்களும் ஒரு குடும்பத்தில் இருந்தால் அந்த குடும்பம் மகிழ்வு நிறைந்ததாக இருக்கும் எனவும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

மேலும் 2015 ஆம் ஆண்டு, குடும்பங்களை மையப்படுத்தி வத்திக்கானில் நடைபெற்ற ஆயர்கள் மாமன்றத்தைத் தொடர்ந்து 2016ஆம் ஆண்டு மார்ச் 19ஆம் திகதி புனித யோசேப்பு விழாவன்று தன்னால் வெளியிடப்பட்ட திருத்தூது அறிவுரைமடல் பற்றியும் குறிப்பிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

# கரம்பொன் செபஸ்ரியார் ஆலயம் 130 ஆண்டுகள் நிறைவில்



கரம்பொன் புனித செபஸ்ரியார் ஆலய 130 ஆண்டுகள் நிறைவில் (1890 – 2020) புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. கரம்பொன் பங்குத்தந்தை பி.பத்திநாதன் அடிகளாரின் பணிக்காலத்தில் புலம்பெயர் ஆலய பங்கு மக்களின் நிதிப்பங்களிப்புடன் புனித செபஸ்ரியார் ஆலயம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் 14 ஜனவரி 2021 அன்று ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டு திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்களை காலைக்கதிர் கிறிஸ்தவ அன்பு நெஞ்சங்களின் பார்வைக்குத் தருகிறோம்.

# உணவுப் பொதிகள் விநியோகம்







அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்தின் 'கொடுக்கும் அழகிய கைகள்' அமைப்பின் மூலம் லண்டனில் வசிக்கும் அமரர் சூசைப்பிள்ளை யேசுதாசன் குடும்பத்தினர் அளவெட்டி பகுதியில் உள்ள 12 குடும்பங்களுக்கு பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் வழங்கியுள்ளனர்.

அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்தின் கொடுக்கும் அழகிய கைகள் அமைப்பினர் லண்டனில் வசிக்கும் அமரர் சூசைப்பிள்ளை யேசுதாசன் குடும்பத்தினருக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துள்ளனர்.

இந்த உலர் உணவுப் பொதிகளை அளவெட்டி புனித சூசையப்பர் ஆலய பங்கு தந்தை ஆ.மனுவல் அடிகளார் மேற்படி 12 குடும்பங்களுக்கும் வழங்கும் படங்களையும் அமரர் சூசைப்பிள்ளை யேசுதாசனின் படத்தையும் காலைக்கதிர் கிறிஸ்தவ அன்பு நெஞ்சங்களின் பார்வைக்குத் தருகிறோம்.

# கொவிட் – 19 காலத்திலும் திருத்தந்தையின் அருகாமை

சமுதாய இடைவெளிகள் கடைப்பிடிக்கப்படும் இவ்வாண்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பல்வேறு வழிகளில் நம் அனைவரோடும் தன் அருகாமையை வெளிப்படுத்தி வருகிறார் என திருப்பீடத் தகவல் தொடர்பு அவையின் செய்திப் பிரிவு இயக்குனர் கூறியுள்ளார்.

2020 ஆம் ஆண்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செயற்பாடுகள் பற்றி அலசி நீண்ட கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ள தொர்னியெல்லி அவர்கள் இந்த 2020ஆம் ஆண்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பன்னாட்டு திருத்தூதுப் பயணங்கள் மேற்கொள்ளாமல் அதேநேரம் விசுவாசிகளின் முன்னிலையில் ஒரு சில பொது மறைக்கல்வியுரைகளையே நடத்தியிருந்தாலும் உலகெங்கும் வாழ்கின்ற எண்ணற்ற மக்களுடன் வத்திக்கானிலிருந்து நேரடி ஒலி – ஒளி வலைக்காட்சிகள் வழியாக உடன் பயணித்தார் என்று கூறியுள்ளார்.

நம்மைப் போன்று திருத்தந்தையும் வத்திக்கானின் சாந்தா மார்த்தா இல்லத்தில் இருந்துகொண்டு கொவிட் – 19 பெருந்தொற்று நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளார் என்றும், திருத்தந்தை தனது போக்கில் தொலைபேசிகள் மற்றும் இணையத் தொடர்புகள் வழியாக தனது மறைப்பணியை தொடர்ந்து ஆற்றி வருகின்றார் என்றும் தொர்னியெல்லி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# மன்னார் ஆயரின் மூன்றாம் ஆண்டு பணியின் நிறைவை முன்னிட்டு இறுவட்டுக்கள் வெளியீடு



மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் மூன்றாம் ஆண்டு பணி நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட (01) மீட்பர் இயேசு (02) விண்மீன் (03) விடிவெள்ளி (04) இரட்சகர் இயேசு ஆகிய நான்கு இறுவட்டுக்களின் படங்கள் இவையாகும்.

மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையமான கலையருவியின் ஏற்பாட்டில் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டங்களில் பங்குபற்றிய பங்குக் குழுக்களின் பாடல்கள் அனைத்தும் இவ் இறுவட்டுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் இந்த நான்கு இறுவட்டுக்களையும் கலையருவி மையத்தின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.















## வெளிநாடுகளிலிருந்து வந்த மேலும் நால்வருக்கு தொற்று!

கொழும்பு, ஜன.17

இலங்கையில் வெளிநாட்டில் இருந்து வந்த மேலும் நான்கு பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று (சனிக்கிழமை) காலை 6 மணிக்கு முடிவடைந்த 24 மணி நேர காலப்பகுதியுடன் மொத்தம் 695 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்று உறுதியானவர்களில் நாடு திரும்பிய எட்டு இலங்கையர்களும் நான்கு வெளிநாட்டவர்களும் அடங்குகின்றனர் என கொரோனா தடுப்புக்கான தேசிய கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்றும் மத்திய கிழக்கு, ஜேர்மனி, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இருந்தும் பலர் நாடு திரும்பியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வருபவர்களுக்கு கொரோனா தொற்று கண்டறிவது இலங்கை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக அதன் எல்லைகளைத் திறப்பதற்கு சில நாள்களுக்கு முன்னரே அடையாளம் காணப்படுகின்றது.

இந்நிலையில் 2021 ஜனவரி 21 முதல் இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் புதிய கொரோனா வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரத்தினக்கல் கோபுரத்தை அமைப்பதனூடாக இரத்தினபுரி மக்கள் கனவை நனவாக்குவோம்!

## பிரதமர் மஹிந்த ஆரூடம்



இரத்தினபுரி மக்கள் பல தசாப்தங்களாக எதிர்பார்த்திருந்த இரத்தினக்கல் கோபுரம் அமைக்கும் கனவை நனவாக்குவோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி, தெமுமாவத்தையில் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச இரத்தினக்கல் கோபுரத்துக்கு அடிக்கல் நாட்டுவதை முன்னிட்டு காணொளி தொழில்நுட்பம் ஊடாக வாழ்த்துக்களைத் தெரிவித்த போதே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த காணொளி தொழில்நுட்பம் ஊடாக பிரதமர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

எதிர்வரும் 4 ஆண்டு காலத்துக்குள் இரத்தினக்கல் மற்றும் தங்காபரண துறையில் 5 பில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய செலாவணி கிடைக்கும் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

எமது தாய்நாடு இரத்தின தீபம் என்று போற்றப்படுகிறது. உலகின் பார்வையில் அந்தளவுக்கான மதிப்பை இரத்தினக்கல் கைத்தொழிலின் மூலம் நாம் பெற்றுள்ளோம்.

இந்தத் கைத்தொழில் நேற்று இன்று ஆரம்பிக்கப்பட்டதொன்று அல்ல. பல நூற்றாண்டுகளாக நம் முன்னோர்கள் இந்தப் பூமியிலிருந்து வெளிப்படும் கற்களின் மதிப்பை நாட்டுக்கு அர்ப்பணித்தனர்.

உலகின் வளர்ச்சிக்கேற்ப இந்த கைத்தொழிலும் முன்னேற்றமடைந்தது. இலங்கை மட்டுமல்ல, உலகின் பல நாடுகளும் இரத்தினக்கல் கைத்தொழிலுக்குள் போட்டியிட்டன. இருப்பினும், குறிப்பிட்ட நேரத்தில் நம் நாடு அதில் கவனம் செலுத்தவில்லை.

இதன் விளைவாக, இரத்தினக்கல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் பல சிரமங்களை எதிர்கொண்டனர். அவர்களது குடும்பங்களின் குழந்தைகளும் அதனால் பாதிக்கப்பட்டனர்.

ஓர் அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் எப்போதும் இரத்தினக்கல் கைத்தொழிலைப் பாதுகாக்க முயற்சித்தோம். இரத்தினக்கல்லின் மதிப்பை நாட்டின் மதிப்பீட்டுடன் இணைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரியில் உள்ள உங்களுக்கு இரத்தினக்கல் தொடர்பாகப் புதிதாக எதனையும் கூறுவதற்கு இல்லை. சப்ரகமுவ போன்றே மேலும் பல மாகாணங்களில் முன்னெடுக்கப்படும் இந்த இரத்தினக்கல் கைத்தொழில் தொடர்பாக நாங்கள் முன்னரைவிட அதிக கவனம் செலுத்தி வருகிறோம்.

சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் இரத்தினபுரிக்கு இரத்தினக்கல் கோபுரம் அமைக்கும் கனவு நனவாக்குவதாக நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.




**லக்ஷ்மி நாராயணா திருமண சேவை**

இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். தொ.பே. 077 197 1667 077 316 4796

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி – 1985.05.22 மதம் – இந்து
ஜாதி – விஸ்வகுலம் நட்சத்திரம் – மிருகசீரிடம் 4
கி.பா – 08 செவ்/சூரி – 10 இல்
தகைமை – Industrial Engineer தொழில் – Engineer Dubai
எதிர்பார்ப்பு – விஞ்ஞான பட்டதாரி மணமகள்.

பிறந்த திகதி – 1994.05.11 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – கார்த்திகை (3)
கி.பா – 65 செவ்/சூரி – 7 இல்
தகைமை – B.S.C.Software Engineer
தொழில் – Company
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச சேவை மணமகள்.

பிறந்த திகதி –1983.03.19 மதம் – இந்து
ஜாதி – P பகுதி ஆண் நட்சத்திரம் – பரணி
கி.பா – 32 செவ்/சூரி – 4 இல்
தகைமை – விவசாய பட்டதாரி தொழில் – Company Manager
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச சேவை தனியார் மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1987.09.08 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – பூராட்டாதி 2
கி.பா – 39 செவ்/ சூரி – 11 இல்
தகைமை – B.sc. M.sc தொழில் – கச்சேரி அரச சேவை
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரசசேவை மணமகள்.

பிறந்த திகதி – 1974.10.19 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – கேட்டை
கி.பா – 46 சூரி/ செவ் – 07 இல்
தகைமை – B.sc தொழில் – Development officer
எதிர்பார்ப்பு – அரச சேவை தனியார் மணமகள்.

பிறந்த திகதி – 1990.08.20 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – ஆயிலியம் 4
கி.பா – 25 செவ் – 8 இல்
தகைமை – Accountant தொழில் – UK PR
எதிர்பார்ப்பு – படித்த மணமகள் (UK + இலங்கையில்)

பிறந்த திகதி – 1988.10.02 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – மிருகசீரிடம் 4
கி.பா – 40 செவ் – 05 இல்
தகைமை – Aerospace Designer தொழில் – UK PR
எதிர்பார்ப்பு – பட்டதாரி UK + இலங்கை மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1991.02.05 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – சித்திரை 4
கி.பா – 15 செவ் – 02 இல்
தகைமை – English Diploma தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகள் தேவை.

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி – 1990.10.27 மதம் – இந்து
ஜாதி –V பெண் நட்சத்திரம் – திருவோணம்
கி.பா – 30 செவ் – 07 இல்
தகைமை – BA தொழில் – Development Officer
எதிர்பார்ப்பு – Engineer or Bank Manager அரச உயர் பதவி (1986 பின்பு) தேவை.

பிறந்த திகதி – 1986.08.27 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – கார்த்திகை 2
கி.பா – 75 செவ் – 08 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor or Engineer மணமகன்.

பிறந்த திகதி – 1991.10.03 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பூசம்
கி.பா – 14 செவ்/சூரி –10 இல்
தகைமை – B.sc I.T.Software Engineer
தொழில் – Company Colombo
எதிர்பார்ப்பு – Engineer or அரச உயர் பதவி மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1990.12.08 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மகம்
கி.பா – 24 செவ் – 08 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor or Engineer மணமகன்.

பிறந்த திகதி – 1989.03.02 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மூலம் 2
கி.பா – 30 செவ் – 01 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor or Engineer விரிவுரையாளர் மணமகன்.

பிறந்த திகதி – 1992.02.28 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பூராடம் 2
கி.பா – 57 செவ் – 8 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor or Engineer மணமகன்.

பிறந்த திகதி – 1985.08.07 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – அச்சுவினி
கி.பா – 35 செவ்/செவ் – 03 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor or Engineer மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1985.04.25 மதம் – இந்து
ஜாதி – P பகுதி நட்சத்திரம் – மிருகசீரிடம் 3
கி.பா – 35 செவ்/சூரி – 03 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor or Engineer மணமகன் தேவை.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

## இரண்டு நகர சபைகளின் தலைவர்கள் இடை நீக்கம்

பலாங்கொடை மற்றும் எம்பிலிபிட்டி நகர சபைகளின் தலைவர்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அதன் அதிகாரங்களை உப.தலைவர்களுக்கு வழங்குவதற்கு ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

## ஊடகக் கருத்துக்களுக்கு மக்கள் வங்கி விளக்கம்!

*அண்மையில் ஊடகங்களில் வெளியிடப்பட்ட அல்லது பிரசுரிக்கப்பட்ட சில கருத்துக்கள் தொடர்பாக மக்கள் வங்கி தெரிவித்துள்ளமை வருமாறு:-*

*மக்கள் வங்கி அரசுக்குச் சொந்தமான நிறுவனம் என்ற வகையில் மற்றும் இலங்கையில் மிகப்பெரிய வாடிக்கையாளர் தளத்தையும் கிளை வலையமைப்பையும் கொண்டுள்ள ஒரு வங்கியாகத் திகழ்கிறது. அத்தோடு ஒப்பற்ற, நிலையான தன்மையையும் மற்றும் பாதுகாப்பையும் கொண்டுள்ளது.*

*ஆரம்பம் முதல் தமது நடவடிக்கைகளில் பேணப்பட்டு வந்த வங்கியின் வலுவான நிலைத்தன்மையின் விளைவாகவும் உயர் நிபுணத்துவம் காரணமாகவும் மக்கள் வங்கி 900 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு வங்கிகளுடன் பரஸ்பர அனுகூலங்களை அனுபவித்திடும் வங்கியியல் உறவுகளைப் பேணி வருகிறது. இந்த நெருக்கமான வங்கியியல் உறவுகளின் விளைவாகவும் வங்கிக்குள்ள நேர்மறையான சர்வதேச நன்மதிப்பின் காரணமாகவும் எந்தவொரு மூன்றாம் தரப்பின் தலையீடும் இன்றி குறிப்பிட்ட வெளிநாட்டு தரப்பினருக்கு நேரடியாகக் கடன் வசதிகள் தொடர்பாக பேச்சுகள் நடத்திடக் கூடிய ஒரு போட்டித் தன்மைமிக்க நிலையில் மக்கள் வங்கி இருக்கின்றது. இது மிகக்குறைந்த செலவுகளையும், எவ்விதமான ஊழலுக்கும் இடமளிக்காது என்பதை யும் உறுதிப்படுத்துகிறது.*

*வங்கியின் சிறப்புமிக்க 60 ஆண்டு கால பாரம்பரியத்தைத் தொடர்ந்து மக்கள் வங்கி நாட்டின் அனைத்து சமூகத்தினருக்கும் சேவை செய்வதில் உறுதியாக உள்ளது. இது மிக உயர்ந்த தொழில் நிபுணத்துவத்தை நிலைநிறுத்துவதன் மூலம் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தையும் முன்னெடுத்துச் செல்கிறது.*

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாஸா எரிப்பு விவகாரத்தில் பாக். பிரதமர் இம்ரான் கானின் தலையீட்டைக் கோரி முஸ்லிம் அமைப்புகள் சேர்ந்து கடிதம்!

இலங்கையில் தொடரும் ஜனாஸா எரிப்பு விவகாரம் தொடர்பில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் தலையீட்டை கோரி சர்வதேச நாடுகளில் செயற்பட்டுவரும் இலங்கை முஸ்லிம் அமைப்புகள் ஒன்றிணைந்து கூட்டாக கடிதம் அனுப்பியுள்ளன.

உலகின் பத்து நாடுகளில் இயங்கி வரும் இலங்கை முஸ்லிம் அமைப்புகள் ஒன்றிணைந்து கூட்டாக இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளன.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், சுவீடன் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் முன்னணி அமைப்புகளுடன் இணைந்து ஐக்கிய இராச்சியத்தில் செயற்பட்டுவரும் வரும் 23 முன்னிலை சமூக அமைப்புகள் இதில் முழுமையான விபரங்களுடன் கையொப்பமிட்டுள்ளன.

இலங்கையில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்யும் விவகாரத்தில் மாலைதீவின் தலையீட்டை குறித்த சர்வதேச நாடுகளில் செயற்பட்டு வரும் முஸ்லிம் அமைப்புகளே கோரியிருந்த நிலையில் இம்முறை சர்வதேச அளவிலான இலங்கை முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமை மற்றும் உணர்வினை வெளிப்படுத்தும் விதமாக இந்த கூட்டு முயற்சி இடம்பெற்றதாக ஏற்பட்டாளர்கள் விளக்கமளித்தனர்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இலங்கை செல்வதற்கான திட்டமொன்று இருப்பதாக தகவல் வெளியானதையடுத்து இவ்விஜயத்தின் போது கட்டாய ஜனாஸா எரிப்பு விடயத்தினால் முஸ்லிம் சமூகம் பாதிக்கப்பட்டிருப்பதை இலங்கை ஜனாதிபதியிடம் எடுத்தியம்பி இதற்கொரு முடிவைக் காண்பதற்கு உதவுமாறு கோரியே இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது.



கட்டாய ஜனாஸா எரிப்பு விவகாரம் உலகளாவிய ரீதியில் வாழும் முஸ்லிம் சமூகத்தை வெகுவாக பாதித்திருக்கும் சூழ்நிலையில், முஸ்லிம் உம்மத்துகளின் விவகாரங்களில் பகிரங்கமாகக் குரல் கொடுக்கும் இம்ரான் கான், இவ்விடயத்திலும் தனது பங்களிப்பை வழங்குவார் என எதிர்பார்ப்பதாக ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## பி.சி.ஆர்.. அன்டிஜென் பரிசோதனையை கண்டு மக்கள் அஞ்சத் தேவையில்லை!

### விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவிப்பு

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிவதற்கு மேற்கொள்ளும் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனையைக் கண்டு பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களில் சிலர் கொரோனா சோதனை செயல்முறைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்ற அச்சத்தில் இருக்கின்றனர் எனத் தொற்றுநோயியல் பிரிவின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இவர்கள் அச்சத்தை விடுத்து வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த பி.சி.ஆர் மற்றும் விரைவான அன்டிஜென் சோதனை செயல்முறைகளில் பங்கேற்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

அந்தவகையில் 1.4 மில்லியனுக்கும் அதிகமான பி.சி.ஆர். சோதனைகள் இதுவரை அரச, தனியார் மற்றும் பல்கலைக்கழக பரிசோதனை நிலையங்களில் நடத்தப்பட்டுள்ளன என வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் 68 வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களில் கொரோனா தொற்று உறுதியானவர்களில் 7 ஆயிரத்து 80 பேர் தொடர்ந்தும் சிகிசிச்சை பெற்றுவருகின்றனர் என தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

## திருகோணமலை பாலையூற்று நேற்றுத் தொடக்கம் முடக்கம்



திருகோணமலை, உப்புவெளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாலையூற்று, பூம்புகார் கிழக்கு பிரதேசம் நேற்று முதல் முடக்கப்பட்டுள்ளது.

பூம்புகார் கிழக்கு பிரதேசத்தில் நேற்ற. முன்தினம் மட்டும் 13 புதிய கொவிட் – 19 தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டமையை அடுத்து குறித்த பிரதேசம் முடக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து பூம்புகார் கிழக்கு பிரதேசத்திற்கு உள் நுழையும் மூன்று வீதிகளில் தடைகள் ஏற்படுத்தப்பட்டு பொலிஸார் மற்றும் இராணுவ வீரர்கள் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று தினங்களில் பூம்புகார் கிழக்கு பிரதேசத்தில் 20 கொவிட் – 19 தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டமையை அடுத்து அப்பிரதேசம் இப்போது முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


இஞ்சிக் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத இஞ்சிக் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை – 150/=



கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778





கல்யாண மாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்

வெளிநாடு போக விரும்பும் மணமகள் தேவை

பிறந்த திகதி – 1985.05.15 மதம் – இந்து V
நட்சத்திரம் – உத்தரட்டாதி பாவம் – 21 இல்
செவ் – 04 இல் சூரி/செவ் – 04 இல்
கல்வி – AL
எதிர்பார்ப்பு – சூரி/ செவ் 2,4,12 இல் உள்ள மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1988.04.03 மதம் – இந்து V
நட்சத்திரம் – சித்திரை 4 பாவம் – 11
கல்வி – SLI Engineering தொழில் – கனடா PR
எதிர்பார்ப்பு – அழகான படித்த பட்டதாரி தேவை.

பிறந்த திகதி – 1990.11.08 மதம் – இந்து V
நட்சத்திரம் – புனர்பூசம் 2 பாவம் – 37 1/2
கல்வி – Q.s தொழில் – Q.s (Dubai)
எதிர்பார்ப்பு – டுபாய் செல்ல விரும்பும் அழகான மணமகள்.

பிறந்த திகதி – 1987.06.02 மதம் – இந்து K
நட்சத்திரம் – ஆயிலியம் பாவம் – 19 1/4
செவ் – 07 இல் கல்வி – M.B.B.S
தொழில் – Doctor (UK)
எதிர்பார்ப்பு – UK வர விரும்பும் Doctor or UK இல் உள்ள Doctor தேவை.

பிறந்த திகதி – 1982.07.22 மதம் – இந்து K
நட்சத்திரம் – ஆயிலியம் பாவம் – 25 1/4
செவ் – 01 இல் கல்வி – AL
தொழில் – கனடா PR
எதிர்பார்ப்பு – கனடா வர விரும்பும் பெண் தேவை.

பிறந்த திகதி – 1985.10.28 மதம் – Rc குருகுலம்
கல்வி – AL தொழில் – UK PR
எதிர்பார்ப்பு – UK வர விரும்பும் Rc பெண் தேவை.

பிறந்த திகதி – 1985.05.25 மதம் – இந்து ஆசாரி
நட்சத்திரம் – மிருகசீரிடம் 1 பாவம் – 08
சூரி/செவ் – 10 இல் கல்வி – Engineering
தொழில் – Engineer
எதிர்பார்ப்பு – டுபாய் வர விரும்பும் சூரி/ செவ் 3, 5, 6, 9, 10 உள்ள மணமகள் தேவை.

மணமகள் விவரம்

வெளிநாடு போக விரும்பும் மணமகன் தேவை

பிறந்த திகதி – 1991.03.13 மதம் – இந்து V
நட்சத்திரம் – அவிட்டம் 1 பாவம் – 28
செவ் – 08 இல் கல்வி – கனடா பட்டதாரி
தொழில் – canada PR
எதிர்பார்ப்பு – கனடா வர விரும்பும் பட்டதாரி விரும்த்தக்கது.

பிறந்த திகதி – 1994.05.14 மதம் – இந்து V
நட்சத்திரம் – திருவாதிரை பாவம் – 05 3/4
சூரி/ செவ் – 06 இல் கல்வி – கனடா பட்டதாரி
தொழில் – canada PR
எதிர்பார்ப்பு – கனடா வர விரும்பும் பட்டதாரி விரும்த்தக்கது.

பிறந்த திகதி – 1986.08.21 மதம் – இந்து V
நட்சத்திரம் – சதயம் பாவம் – 27 1/2
செவ் – 04 இல் கல்வி – கனடா பட்டதாரி
தொழில் – canada PR
எதிர்பார்ப்பு – கனடா வர விரும்பும் பட்டதாரி விரும்த்தக்கது.

பிறந்த திகதி – 1991.06.19 மதம் – இந்து ஆசாரி
நட்சத்திரம் – உத்தரம் 1 பாவம் – 56 1/4
செவ் – 01 இல் கல்வி – UK பட்டதாரி
தொழில் – UK PR
எதிர்பார்ப்பு – பட்டதாரி 1,7,8 செவ்வாயுள்ள UK வர விரும்பும் ஆசாரி மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1994.04.19 மதம் – இந்து ஆசாரி
நட்சத்திரம் – பூசம் பாவம் – 50 இல்
சூரி /செவ் – 01 இல் கல்வி – கனடா பட்டதாரி
தொழில் – கனடா PR
எதிர்பார்ப்பு – பட்டதாரி செவ் 1, 7, 8 இல் உள்ள கனடா வர விரும்புபவர் தேவை.

பிறந்த திகதி – 1986.09.20 மதம் – இந்து P
நட்சத்திரம் – ரேவதி பாவம் – 34
செவ் – 04 இல் தொழில் – ஜேர்மன் PR
கல்வி – பல் வைத்தியம் (ஜேர்மன் படிப்பு)
எதிர்பார்ப்பு – ஜேர்மன் வர விரும்பும் மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1991.02.04 மதம் – இந்து V
நட்சத்திரம் – சித்திரை 1 பாவம் – 2 1/2
கல்வி – M.B.B.S டென்மார்க் தொழில் – டென்மார்க் Doctor
எதிர்பார்ப்பு – டென்மார்க் வர விரும்பும் Doctor or Engineer .

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை வீதி,
இமயாணன் கிழக்கு, உடுப்பிட்டி
வல்வெட்டித்துறை.

077 3434 415/ 077 8578 528

ந.லோகதயாளன்

# வடக்கு அரச செயலகங்களில் நீளும் நிதி மோசடிகள்!

இவ்வாறு வாரா வாரம் மோசடிகள், முறைகேடுகளின் பட்டியல் நீளும்போது கணக்காய்வுப் பிரிவினர் என்னதான் செய்தனர் என்ற நியாயமான கேள்வியும் எழுப்பப்படுகின்றது.


வடக்கு மாகாணத்தில் மத்திய அரச நிர்வாகம் என்றாலும் மாகாண நிர்வாகம் என்றாலும் குளறுபடிகளையும் நிர்வாக முரண்பாடுகளையும் தாண்டி மோசடிகள் நீளுவது ஒரு விதிமுறையோ எனச் சிந்திக்கும் அளவிற்கு பட்டியல் நீள்கின்றது.

இதில் ஒரு பங்கு பற்றிய விவரம் கடந்த ஆண்டு இறுதியில் வெளிவந்த நிலையில் அதன் இரண்டாம் பாகம் இப்போது வெளிவரும் அளவிற்கு நீண்டுவிட்டது. நிர்வாக முறைகேடுகளைத் தாண்டி நிதிசார் முறைகேடுகளும் வெளி வந்த வண்ணமே உள்ளன.

இந்த வரிசையில் வடக்கு மாகாணத்தில் முன்னர் இரு அமைச்சுக்களில் செயலாளராக இருந்த ஒருவர் தனக்கு தெரிந்த 26 பேரிற்கு ஆற்றில் ஓடும் நீரை அள்ளிக் கொடுப்பது போன்று தம்பாட்டில் நியமனம் வழங்கியுள்ளமை தற்போது கண்டுகொள்ளப்பட்டுள்ளது. இதில் பெரும் ஆச்சரியம் என்னவென்றால் அதில் பல நியமனங்களிற்கு ஆளணி அங்கீகாரம் கூட கிடையாது என்பதோடு அங்கீகாரம் உள்ள வெற்றிடத்திற்கும் உரிய அனுமதியின்றியே நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தற்போது பெரும் பூதாகாரமாகியுள்ளது.

இந்த 26 பேரது முறையற்ற நியமனத்திற்கு 4 ஆண்டுகளிற்கு மேலாக அரச நிதி சம்பளமாக வழங்கப்பட்டுள்ளமை பெரும் ஆச்சரியமாகவுள்ளது.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் இடம்பெற்ற நிதி மோசடியில் ஈடுபட்ட உத்தியோகத்தருக்கு முன்பு அதே பணியில் இருந்து அதே மாவட்டத்தில் ஆசிரிய நியமனம் பெற்றுச் சென்றவரும் தனது கைவரிசை



யைக் காட்டியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அந்த உத்தியோகத்தர் தனது பங்கிற்கு 16 லட்சம் ரூபாவை ஆட்டையைப் போட்டுள்ளார். இதனால் குறித்த ஆசிரியரையும் பணியில் இருந்து இடைநிறுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இருப்பினும் தற்போது இவர் 10 லட்சத்தை மீளச் செலுத்தியுள்ளார்.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் இடம்பெற்ற நிதிமோசடியுடன் தொடர்புபட்ட இன்னுமொருவரையும் பணிநீக்கம் செய்யத் திணைக்களம் நடவடிக்கை எடுத்த நிலையில் (மூன்றாவது உத்தியோகத்தர்) அரசின் பிரதான நிர்வாக இயந்திரம் (சட்டத்துடன் தொடர்பு பட்டது) அவரை பணி நீக்கம் செய்ய வேண்டாம் என அழுத்தம் வழங்குவதில் என்ன மர்மம் இருக்கின்றது என சிலர் தேடுகின்றனர்.

மன்னார் வைத்தியசாலையில் இரு தாதியர்கள் நியமனம் முதல் இன்று வரையில் ஒருவர் 28 வருடங்களாகவும், மற்றையர் 25 வருடமாகவும் தொடர்ச்சியாக ஒரே வைத்தியசாலையில் (குடும்பச் சொத்து போன்று ) பணியாற்றுகின்றனர். இருப்பினும் 8 வருடம் 10 வருடம் சேவையாற்றியவர்கள் எல்லோரும் எப்போதோ இடமாற்றப்பட்டு விட்டனர். இது எவ்வாறு என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலே காகிதாதி, ரோணர் கொள்வனவு உட்பட பல கொள்வனவுகளில் மோசடி இடம்பெற்றதாக கருதி மாவட்டச் செயலகம் சாராத அதிகாரிகள் மூவரை உள்ளடக்கிய குழு ஒன்று விசாரணையில் ஈடுபட்டுள்ளது. அந்தக் குழுவில் உள்ளவர்களிற்கு தலை சுற்றுகின்றதாம். ஏனெனில் கொள்வனவு செய்த பொருளும் இல்லை, களஞ்சியத்திற்கு வந்தமைக்கான பதிவும் இல்லை, இருப்பு பதிவேட்டிலும் பதிவேற்றம் இல்லை. இதே நேரம் கொள்வனவுச் சிட்டைகள் காகிதாதி முதல் தளபாடம் என எந்த வகையான பொருள்களும் ஒரே கடையிலேயே கொள்வனவு செய்துள்ளதாக சிட்டைகள் உள்ளனவாம்.

இத்தகைய கொள்வனவுக்கான கூறுவிலை கோரல் அல்லது 3 வர்த்தக நிலையங்களில் பெற்ற தான பெறுமதி மதிப்பீடு வழங்கிய வர்த்தக நிலையங்களையே காணவில்லை என மோசடியின் தன்மை நீள்வதோடு அவ்வாறு இடம்பெற்ற மோசடிகளின் பெறுமதி ரூபாயில் லட்சத்தையும் தாண்டி மில்லியன் கணக்கில் செல்வதாக தகவல். இதில் ஒரு பொருள் ரோணர். அதில் மட்டும் 42 எனக் கண்டு கொள்ளப்பட்டுள்ளது. இதனுடன் தொடர்பு பட்ட ஆவணங்களை விசாரணை அதிகாரிகள் அள்ளிச் சென்று விட்டனர்.

இவ்வாறு வாரா வாரம் மோசடிகள், முறைகேடுகளின் பட்டியல் நீளும்போது கணக்காய்வுப் பிரிவினர் என்னதான் செய்தனர் என்ற நியாயமான கேள்வியும் எழுப்பப்படுகின்றது.

இதேநேரம் கடந்த ஆண்டு கொரோனா உச்சம் பெற்ற காலத்தில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திற்கு கொடையாளர்கள் வழங்கிய நிவாரணத்தை ஆட்டையைப் போட்ட விடயம் தொடர்பாக மாவட்ட அதிகாரிகள் மற்றுமோர் விசாரணையை எதிர்கொண்டனர். இதன் ஆரம்பம் கடந்த 12ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகியுள்ளது. அந்த ஆட்டையைப் போட்ட விடயத்தில் நியாயமான சாட்சி சொன்ன அதிகாரி மாவட்டத்திலேயே இல்லாது இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் யாழ்ப்பாணம் செம்மணியில் அமைக்கப்பட்ட நல்லைக் கந்தன் வரவேற்பு வளைவு திறப்பு விழா ஏதோ அரச விழாவாக காட்ட முயன்று




முடியாத நிலையில் முதல் நாள் நிதியை வழங்கிய வரை வைத்து இடம்பெற்ற சாந்தி பூசையை தடுத்து நிறுத்த முயன்று அது முடியாமல்போகவே மறுநாள் பொலிஸார் மூலமும் முயலப்பட்டது.

ஆலயத்தின் பணியில்கூட அரசியல் ஆதிக்கம் மேலோங்க வேண்டும் என்னும் அற்பத்தனத்தின் மத்தியில் பொறியியலாளரின் அறிக்கை என்னும் பெயரில் ஒன்று கடந்த ஆண்டு பெறப்பட்டுள்ளது.

அது தொழில் நுட்ப விடயம். அறிக்கை பெறுவதும் தவறு அல்ல. அந்த அறிக்கை மாவட்டத்தின் அரச அதிபரின் கையில் முதல் நாள் வழங்கப்பட்டது. மறு நாள் காலையில் அது அரச விசுவாசிகள் கையில் தவழும் போதும் சம்பந்தப்பட்ட எவருக்குமே அதில் என்ன இருக்கின்றது என்றே தெரியாத காரணத்தினால் உயரதிகாரிகள் மாவட்டச் செயலாளரிடம் அது பற்றி வினாவினர். அந்த அறிக்கை மாவட்டச் செயலகத்தில் இருந்து காணாமல் போய்விட்டது எனப் பதிலளிக்கப் பட்டாதாம். ஆகா இது எல்லோ very Good நிர்வாகம்.

இதேநேரம் இந்த வளைவு தரமற்றது என அறிக்கையிட்டதாக கூறப்படும் பொறியியலாளர் மேற்படி நிர்மாண வேலையானது திருப்திகரமான முறையில் மேற்கொள்ளப்பட்டது என தற்போது சான்றிதழ் வழங்கிய பின்பே அது திறக்கப்பட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

## சிறைச்சாலை அத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினர் கனகசபை தேவதாசன் (வயது 64) கடந்த 6ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

அவருடைய உடல் நிலை கவலைக்கிட மான நிலையில் நேற்று முற்பகல் 10 மணிக்கு சிறை அத்தியட்சகர் மற்றும் உதவி அத்தியட்சகர் ஆகியோருக்கும் தேவதாசனுக்கும் இடையில் மொழிபெயர்ப்பு உதவியுடன் பேச்சு நடத்தப்பட்டது.

அதன்போது சில முடிவுகள் எட்டப்பட்டன. அதாவது ஏற்கனவே இந்த விடயமாக மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அனுப்பியுள்ள கடிதத்தின் தொடர்ச்சியாக நாளை (18) மேன்முறையீட்டு மன்றுக்கு நேரடியாகச் சென்று தேவதாசனின் கோரிக்கை மீதான உரிய நடவடிக்கையை உடனே எடுக்குமாறு கேட்பதாகவும், மன்று இதற்கு தாமதம் செய்யுமாயின் அடுத்து வரும் 3 வாரங்களுக்கு சட்டமா அதிபர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு அவருடைய கோரிக்கை மீதான உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்பதாகவும், இதனை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்குத் தெரிவிக்கவுள்ளதாகவும், இவை எதுவும் நடைபெறவில்லையெனில் உண்ணாவிரதத்தை மீண்டும் தொடருவது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

சிறை அத்தியட்சகர் உறுதியளித்ததன் காரணமாக அதை ஏற்று தனது உண்ணாவிரதப் போராட்டத்தை 3 வாரங்களுக்கு அவர் இடைநிறுத்தியுள்ளார் என்று தேவதாசனின் உறவுகள் குரலற்றவர்களின் குரல் அமைப்புக்குத் தெரிவித்துள்ளனர்.

## மக்களுக்கு முன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாதம் ஆகும் போது கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுப்பதாக அரசு உறுதி வழங்கிய போதிலும், அது உண்மைக்கு புறம்பானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

'உங்களின் ஆட்சி இருந்திருக்கும் பட்சத்தில், சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு என்ன செய்திருப்பீர்கள்?' என எழுப்பப்பட்ட கேள்விக்கு ரணில் விக்கிரமசிங்க புன்னகையுடன் பதில் வழங்கினார்.

ஒரே நன்மை இருக்கின்றது. அரசிலும் இல்லை. நாடாளுமன்றத்திலும் இல்லை. அப்படியென்றால், ஒன்றும் செய்யத் தேவையில்லை என்று பதிலளித்தார்.

## அப்பாறையில் கருணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொண்டனர் என்று பொத்துவில் பிரதேச சபையின் பிரதி தவிசாளர் பெருமாள் பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஊறணியில் உள்ள எனது விடுதியில் தங்கியிருந்த நேரம் தொலைபேசி அழைப்பொன்றில் கதைத்துக் கொண்டிருந்தேன். அந்த நேரம் மதில் மேலால் பாய்ந்து வந்தவர்கள் என் பின்னால் வந்து தலையில் வாளினால் தாக்குதலை மேற்கொண்டனர். என்னால் முடிந்த அளவுக்கு தாக்குதலை நான் தடுத்தேன். எனினும், பலத்த வெட்டுக்காயங்களுக்கு நான் உள்ளாகினேன்.

மிகவும் அவதியுற்ற நான், என் அப்பாவை சத்தமிட்டு அழைத்தேன். அவர் சம்பவ இடத்துக்கு ஓடி வந்ததும் தாக்கியவர்கள் ஓடித் தப்பினார். என்னைத் தாக்கியவர்களை அடையாளம் கண்டேன். பின்னர் பொத்துவில் வைத்தியசாலைக்கு சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக அம்பாறை பொது வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டேன் அங்கு எனக்கு தலையில் 26 தையல் போடப்பட்டது.

என்னைத் தாக்கியவர்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கருணாவுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்கள். அந்தநேரம் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் ஜெய சிறில் மீதும் தாக்குதலை மேற்கொண்டார்கள். இவர்களுக்கு எதிராக பல வழக்குகள் பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் நிலுவையில் உள்ளன. தாக்குதலை நடத்தியவர்களில் ஒருவர் வவுனியாவில் பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமை புரிபவர் .

இவர்களைப் போன்று கருணாவுக்குப் பின்னால் போகும் இளைஞர்கள் அடிதடி என வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறானவர்களை மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். எந்த எதிர்ப்புகள் வந்தாலும் நான் பிரதி தவிசாளர் பதவியை ஏற்றுக்கொண்டு தொடர்ந்து மக்களுக்குச் சேவைகளைச் செய்யவுள்ளேன் – என்றார்.



# வவுனியா பொருளாதார மத்திய நிலையம் இரு வாரங்களில் திறப்பதற்கு ஏற்பாடு!

## அமைச்சர் டக்ளஸ் உத்தரவாதம்



வவுனியாவில் நீண்ட காலமாக திறக்கப்படாமல் காணப்படும் பொருளாதார மத்திய நிலையம் இரு வாரங்களில் மீண்டும் திறக்கப்படும் என அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ உறுதியளித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது –

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவினூடாக அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷவுடன் வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தைச் செயற்படுத்துகின்றமை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டு பல ஆண்டுகளாகிய போதிலும் திறக்கப்படாமல் காணப்படுவதால் அந்தக் கட்டடம் வீணாகுவது மற்றும் பொருளாதார மத்திய நிலையத்தின் தேவை தொடர்பாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இரு வாரங்களில் வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தைத் திறப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என என்னிடம் உறுதி அளித்தார் எனவும் அவர் தெரிவித்தார்.




# ஓமான் சென்ற 283 இலங்கையர் தாய்நாட்டை வந்தடைந்தார்கள்!

கொழும்பு, ஜன. 17

ஓமான் நாட்டுக்கு தொழில் நிமித்தமாக சென்ற 283 இலங்கையர்கள் நேற்று (சனிக்கிழமை) காலை 8.30 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் துன்புறுத்தல்கள் மற்றும் ஏனைய பல காரணங்களால் ஓமான் நாட்டில் சிக்கியிருந்த நிலையில் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளனர்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யு.எல் – 206 என்ற விமானத்தில் இவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு வருகைதந்த அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 04 . 1955



மறைவு 15 . 01 . 2021

அமரர்

## இரத்தினம் சிவநாதன்

(ஜெயப்பூர் செயற்கை கால் நிலையம் - சுண்டுக்குளி)

சரவணையை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொட்டடி வைரவர் கோவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சிவநாதன் அவர்கள் வெள்ளிக்கிழமை (15.01.2021) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் தெய்வானை (கமலாதேவி) தம்பதிகளின் மகனும், மகாநாதன் மகாலட்சுமி, கோமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் புஸ்பலதா, ரவிச்சந்திரன், மதிமோகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ருத்திகா, சதுர்த்திகாவின் அன்பு பெரியப்பாவும் பிரசாந், நிசாந்தன், நிசாந்தினி, சுபாஜினி, கஜேந்தினி, தயாநிதி, ஜனுசன், மதுசன், டிலக்சி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெனுசனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (17.01.2021) காலை 7 மணியளவில் 180, பிரதான வீதியில் அமைந்துள்ள வைற்கவுஸ் மண்டபத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்
லிங்கநாதன் குடும்பத்தினர்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

021 222 6268

# முப்படைகளிலிருந்து விலகிய 200 பேர் சிறைப் பாதுகாப்புக்கு

முப்படைகளிலிருந்து சட்ட ரீதியாக விலகிய 200 பேரை சிறைச்சாலை காப்பாளர்களாக உடனடியாக இணைத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

40 வயதுக்குக் குறைந்தவர்களை இந்தப் பதவிக்கு இணைத்துகொள் வதற்கான விண்ணப்பங்கள் பத்திரிகைகள் மூலம் வெளியிடப்பட்டுள்ளன எனச் சிறைச்சாலைகள் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

போஹம்பறை சிறைச்சாலையில் இன்று கண்காணிப்பு விஜயம் மேற் கொண்ட அவர், அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

# மட்டக்களப்பில் கடும் வெள்ளம்: பல பகுதிகள் நீரில் மூழ்கின!



மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

மழையால் மட்டக்களப்பு, செங்கலடி பிரதேச செய லாளர் பிரிவுக்குட்பட்ட செங்கலடி ஐயங்கேணி கிராமம் முற்றாக நீரில் மூழ்கியுள்ளது.

ஐயங்கேணி, விபுலானந்தபுரம், பாரதிபுரம், ரெட்ணாபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 80 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச்சேர்ந்தவர்கள், தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டடுள்ளனர்.

இந்தக் கிராமங்களின் வீதிகள் முற்றாக நீரில் மூழ்கியமையால், மக்கள் வீதிப் போக்குவரத்துக்குப் பெரிதும் சிரமப்படுகின்றனர். வீடுகளினுள்ளும் வெள்ள நீர் சென்றிருப்பதை அவதானிக்ககூடியதாக உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேபோன்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மயிலம்பாவெளி கிராம மக்களும் வெள்ள நீரால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மயிலம்பாவெளி – விநாயகர்புரம் மற்றும் விபுலானந்தபுரம் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 40 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், குறித்த மழையின் காரணமாக சில பாடசாலைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன எனவும் மட்டக்களப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.01.2021 இல் வெளியிடப்பெற்றது.